வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu




Email : news@eelanadu.lk | மலர் : 01 | 26.11.2021 வெள்ளிக்கிழமை | இதழ் : 356 | பக்கங்கள் : 16

# கொடிகள், அடையாளமின்றி மாவீரரை நினைவுகூரலாம்

## முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றம் கட்டளை

முல்லைத்தீவு, நவம்பர் 26

“இறந்தவர்களை நினைவுகூருவது மானுட பண்பு. தடை செய்யப்பட்ட அமைப்பின் உறுப்பினராயினும் அந்த அமைப்பின் கொடிகள், அடையாளங்களை பிரதிநிதித்துவம் செய்யாது நினைவுகூரலாம்”, இவ்வாறு தெரிவித்த முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றம் மாவீரர் நாளை நினைவேந்த தான் முன்னர் விதித்த தடைக் கட்டளையை திருத்தியது.

15

ஜி.எஸ்.பி வரிச்சலுகை விவகாரம்

## ஐரோப்பிய ஒன்றிய தூதுவருடன் அமைச்சர் பீரிஸ் இன்று சந்திப்பு

கொழும்பு, நவ. 26

‘பயங்கரவாத தடைச் சட்டம் முழுமையாக நீக்கப்படாது. அது தற்போதைய யுகத்துக்கேற்ப மாற்றியமைக்கப்படும்.’ - என்று வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை

15



## யாழ்.பல்கலைக்கழகத்தில் மாவீரர்களுக்கு மலரஞ்சலி

யாழ்ப்பாணம், நவ.26

மாவீரர் வாரத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் மாவீரர்களுக்கு மலரஞ்சலி செலுத்தி நினைவேந்தல் நடைபெற்றது.

பல்கலைக்கழக மாணவர்கள் மலரஞ்சலி செலுத்தி முழந்தாளில் இருந்து மாவீரர்களுக்கு தமது ஆத்மார்த்தமான அஞ்சலி செலுத்தினர்.

15

## கொரோனா தொற்றால் மேலும் 27 பேர் மரணம்

கொழும்பு, நவ. 26

நாட்டில் மேலும் 27 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் மரணித்தனர்.

இவ்வாறு உயிரிழந்தவர்களில் 19 ஆண்களும், 8 பெண்களும் அடங்குகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் நேற்றுமுன்தினம் இந்த மரணங்கள்

15

## வடமராட்சியில் உயிரிழந்த இரண்டு பேருக்கு தொற்று!

யாழ்ப்பாணம், நவ.26

வடமராட்சியில் உயிரிழந்த முதியவர் மற்றும் இளைஞர் ஆகியோருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

வல்வெட்டித்துறை, குச்சம் ஒழுங்கையைச் சேர்ந்த செங்கல்வரதராசா சக்திவேல் (வயது 76) என்ற முதியவர் நேற்றுமுன்தினம் வீட்டில் வழுக்கி விழுந்த நிலையில் வைத்திய சாலைக்கு

15

## நல்லெண்ணத்துடன் புலம்பெயர் தமிழர்கள் செயல்படுவார்கள்!

### எதிர்பார்க்கிறாராம் ஜனாதிபதி

கொழும்பு, நவ. 26

புலம்பெயர் தமிழருக்கு விடுத்த அழைப்பு தொடர்பில் நல்லெண்ணத்துடன் அவர்கள் செயல்படுவார்கள் என்று தாம் எதிர்பார்க்கிறார் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஐக்கிய நாடுகள் சபையின் உதவி செயலரிடம் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், அனைத்து இன

15

## பொருளாதார நெருக்கடி நீடித்தால் மார்ச்சில் சிவில் யுத்தம் ஏற்படும்!

### ஐக்கிய மக்கள் சக்தி எச்சரிக்கை

கொழும்பு, நவ. 26,

“நாட்டில் பொருளாதார நெருக்கடி நீடித்தால் எதிர்வரும் மார்ச் மாதமளவில் சிவில் யுத்தம் ஒன்று ஏற்படுவதை யாராலும் தடுக்க முடியாது”, என்று தெரிவித்த பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி, “சிறுபான்மை சமூகங்களுக்கு நெருக்கடிகளை கொடுக்கும் அரசுக்கு ஒருபோதும் சர்வதேசத்தால் நிதி கிடைப்பதில்லை என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்”, என்றும் தெரிவித்துள்ளது.

நேற்று குழுநிலை விவாதம் ஒன்றில் பங் கேற்ற

15

## இந்தியாவின் செல்வாக்கை குறைக்கும் இலங்கையின் திட்டம் வெற்றிபெறாது!

### பாராளுமன்றத்தில் கஜேந்திரகுமார் எம். பி.

கொழும்பு. நவ. 26,

இந்தியாவின் செல்வாக்கை குறைக்கும் விதமான கொள்கைகளையே இலங்கை எப்போதும் வகுத்து வந்துள்ளது. இலங்கையில் ஆதிக்கம் செலுத்தும் ஒரே நாடாக தாம் இருக்க வேண்டும் என்பதையே இந்தியா விரும்புகின்றது. இந்நிலையில் இந்தியாவை சமாளிக்கலாம் என நீங்கள் நினைத்து ஏனைய வல்லரசுகளுக்கு சில பகுதிகளையும் இந்தியாவுக்கு சில பகுதிகளையும் வழங்கலாம் எனக் கருதினால் அது ஒருபோதும் வெற்றி பெறாது என தமிழ் தேசிய

15



## இந்தியாவின்...

மக்கள் முன்னணியின் தலைவரும் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று குழுநிலை விவாதத்தில் உரையாற்றியபோதே மேற்கண்டவாறு கூறினார். மேலும்,

நாட்டின் வெளிவிவகார கொள்கையில் தேசிய வேலைத்திட்டம் உள்வாங்கப்படுவது அவசியம். ஆனால், இலங்கையில் எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் அவர்கள் பௌத்த - சிங்கள கொள்கையில் பயணித்து, சிங்கள - பௌத்த அடையாளத்தை வெளிப்படுத்தவே முனைகின்றனர். இதன் விளைவாக உள்நாட்டிலேயே எதிரிகளை உருவாக்கிக் கொண்டுள்ளன. இதற்கு தமிழர்கள் பிரதான இலக்கானதுடன், இன்று முஸ்லிம்கள், கிறிஸ்தவர்களும் இலக்கு வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த கொள்கையில் அரசாங்கம் பயணிப்பதால் இந்த நாட்டின் தமிழர்கள், தென்னிந்திய தமிழர்களுடன் இணையும் நிலைக்கு தள்ளப்பட்டனர். இதனால் இலங்கையை இந்தியா ஆக்கிரமிக்கிறது என்ற நோக்கத்தில் பார்க்கும் மனநிலையும் உருவாக்கப்பட்டது. இவ்வாறான சூழலால் இந்தியாவையும் எதிரி என நினைக்கும் நிலை ஆரம்பத்திலேயே உருவாகிவிட்டது. ஆகவே, இந்தியாவின் செல்வாக்கை குறைக்கும் விதமான கொள்கைகளையே இலங்கை எப்போதும் வகுத்து வந்துள்ளது. ஒவ்வோர் அரசாங்கமும் இதே கொள்கையில்தான் பயணிக்கின்றன.

1980களில் ஜெயவர்த்தன அரசின் காலத்தில், உலக பனிப்போர் காலத்தில் இந்தியா ரஷ்யாவுடன் நெருக்கமாக உறவை பின்பற்றிய சூழ்நிலையில், இலங்கை அமெரிக்காவுடன் இணைந்து இந்தியாவை வெறுப்பேற்றியது. இதன் விளைவாக இந்தியா தலையிட்டு இலங்கையை அமெரிக்காவுடன் நெருக்கமாக செயல்பட வேண்டாம் என வலியுறுத்தும் நிலைமை ஏற்பட்டது. பனிப்போர் முடிவுக்கு வந்த பின்னர் நிலைமைகள் மாறின.

தற்போது உலகை வல்லரசாக சீனா ஆக்கிரமித்து வருகின்ற நிலையில், இலங்கை மீண்டும் சிங்கள - பௌத்த கொள்கையை கையில் எடுத்துக்கொண்டு தமது அதிகாரத்தை கையில் வைத்துக் கொள்ள சீனாவுடன் நெருக்கத்தை ஏற்படுத்தி வருகின்றது. இதனால் சீனாவின் நலனுக்காக அவர்கள் நாட்டுக்குள் ஊடுருவவும் இடமளித்துள்ளனர். சீனாவும் இதனை உறுதிப்படுத்திக் கொண்டு இலங்கையில் அவர்களின் வேலைத்திட்டத்தை முன்னெடுத்து வருகின்றது. இது பூகோள அரசியலில் பாரிய நெருக்கடியை இலங்கைக்கு ஏற்படுத்தியுள்ளது.

வல்லரசுகளான இந்தியா, சீனா, அமெரிக்காவை நாட்டுக்குள் இடமளித்து இலங்கை நெருக்கடிக்குள் விழுந்துள்ளது. ஆனால் இந்த பூகோள அரசியலை இலங்கை தமக்கு சாதகமாக பயன்படுத்திக்கொள்ள முடியும். அதற்கு முதலில் உள்நாட்டு கொள்கையில் மாற்றங்களை செய்தாக வேண்டும். அதன் மூலமாக நமது நலனுக்காக வல்லரசுகளை பயன்படுத்திக்கொள்ள முடியும். ஆனால், நாம் அவ்வாறான வெளிப்படை கண்ணோட்டத்தில் பார்க்க முயற்சிப்பதில்லை. சிங்கள - பௌத்த பேரினவாதத்தையே ஆட்சியாளர்கள் கையில் தக்கவைத்துள்ளனர். இவர்கள் சிங்கள - பௌத்த வாக்குகளில் ஆட்சிக்கு வந்ததாக கொண்டாடி வருகின்றனர். இது வெட்கப்பட வேண்டிய செயல்பாடு.

இன்று நாம் பல்வேறு பிரச்னைகளில் சறுக்கி வருகின்றோம். இவ்வாறான நிலையில் உங்களின் நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ளாத வரையில், பூகோள அரசியலில் வெற்றி கொள்ள முடியாது. குறிப்பாக இந்த வலயத்தில் இந்தியாவின் பங்களிப்பு அவசியம். அவர்களும் இங்கு வேறு வல்லரசுகளின் ஆதிக்கத்தை ஏற்படுத்த விரும்பவில்லை. இலங்கையில் ஆதிக்கம் செலுத்தும் ஒரே நாடாக தாம் இருக்க வேண்டும் என்பதையே இந்தியா விரும்புகின்றது. இந்தியாவை சமாளிக்கலாம் என நீங்கள் நினைத்தால் அதற்கு ஏனைய வல்லரசுகளுக்கு சில பகுதிகளையும் இந்தியாவிற்கு சில பகுதிகளையும் வழங்கலாம் என நீங்கள் கருதினால் அது ஒருபோதும் வெற்றிபெறாது.

இதற்கு எமக்கு இருக்கும் ஒரே வழிமுறை, இலங்கையை பன்மைவாத நாடாக்குவதுடன், தேசிய கொள்கையை மாற்றிக்கொள்வதும், புதிய அரசியல் அமைப்பின் மூலமாக அதனை உறுதிப்படுத்துவதும் மட்டுமேயாகும். பிரிவுகளுக்கு இடமளிக்காது பூகோள அரசியலை கையாளுவதுமே சகலருக்கும் சாதகமாக அமையும் - என்றார்.

## பொருளாதார...

எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவான ஐக்கிய மக்கள் சக்தியின் லக்ஷ்மன் கிரியெல்லவே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றிய போது, "இந்த அரசு ஆட்சிக்கு வந்த அனைத்து காலங்களிலும் சர்வதேசத்துடன் முரண்பட்டே வந்திருக்கின்றது. மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த 2012, 2013, 2014 காலப்பகுதியில் தொடர்ந்து மூன்று தடவைகள் ஐக்கிய நாடுகள் சபை எமது நாட்டுக்கு எதிராக பிரேரணை கொண்டுவந்திருந்தது.

தற்போது கோட்டாபய ராஜபக்ஷ அரசும் மஹிந்த ராஜபக்ஷ சென்ற வழியிலேயே செல்கின்றது. இந்த அரசின் முதலாவது வருடம் ஐ. நா. மனித உரிமைகள் பேரவை எமக்கு எதிராக பிரேரணை கொண்டுவந்தது. அதில் நாங்கள் பெரும் தோல்வியடைந்தோம். மத்திய கிழக்கு நாடுகளும் எமக்கு எதிராக வாக்களித்திருந்தன. அதனால், அமைச்சர் ஜீ. எல். பீரிஸ் அடுத்த முறை மனித உரிமைகள் பேரவைக்கு செல்லும்போது எமக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட விடயங்கள் தொடர்பாக அவதானம் செலுத்த வேண்டும்.

சிறுபான்மை சமூகத்துக்கு எதிரான நடவடிக்கைகளும் நாட்டுக்கு எதிராகவே உள்ளன. கொரோனா தொற்றுக்குள்ளாகி முஸ்லிம் இனத்தவர் ஒருவர் மரணித்தால் அந்த சடலம் 150 கிலோ மீற்றருக்கு அப்பால் கொண்டு சென்றே அடக்கம் செய்யப்படவேண்டியுள்ளது. இது அந்த சமூகத்துக்கு வழங்கும் தண்டனை. முஸ்லிம் மக்கள் பல நூறு வருடங்கள் எம்முடன் இணைந்து வாழ்பவர்கள். கண்டியில் இருக்கும் சில முஸ்லிம்களின் பெயரின் முதல் எழுத்து சிங்கள பெயராகவே இருக்கின்றது. எமது அரசாங்கத்தில் சிறுபான்மை சமூகத்தின் உரிமைகளை மதித்து நடப்பதை நாங்கள் உள்ளத்தால் காட்டி இருக்கின்றோம். குறிப்பாக தேசிய கீதத்தின் ஒரு பகுதியை நாங்கள் தமிழ் மொழியில் இசைத்தோம். அதன் மூலமே சர்வதேச சமூகத்துக்கு எம்மீது நம்பிக்கை ஏற்பட்டது. அதனால் சிறுபான்மை சமூகங்களுக்கு நெருக்கடிகளை கொடுக்கும் அரசாங்கத்துக்கு ஒருபோதும் சர்வதேசத்தின் நிதி கிடைப்பதில்லை அதனை நாங்கள் உணர்ந்துகொள்ளவேண்டும்.

பயங்கரவாத தடைச் சட்டத்தில் திருத்தம் செய்யவேண்டும் என ஐ. நா. தெரிவித்திருக்கின்றது. அவர்கள் தெரிவிக்கும் திருத்தம் நியாயமானது. கைது செய்யப்படுபவரை 24மணி நேரத்துக்குள் நீதிமன்றத்துக்கு ஆஜர்படுத்தவேண்டும் என தெரிவிக்கின்றனர். அதே போன்று தடுப்புக்காவல் கட்டளையில் 19 மாதங்கள் தடுத்துவைக்கலாம். அதனை குறைக்குமாறே தெரிவிக்கின்றனர். இந்த திருத்தங்களை கொண்டுவந்தால், அதற்கு நாங்கள் ஆதரவளிப்போம்.

இதேவேளை, நாட்டில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டிருக்கின்றது. அதனால் எமது கடன் தவணைகளை நீடித்துக்கொள்ள சர்வதேசத்துடன் கலந்துரையாட வேண்டும். இந்தநிலை நீடித்தால் மார்ச் மாதமாகும்போது சிவில் யுத்தம் ஒன்று ஏற்படுவதை யாராலும் தடுக்க முடியாது - என்றார்.

# சீரற்ற வானிலையால் காரைநகரில் 4 வீடுகள் சேதம் 8 பேர் இடம்பெயர்வு

யாழ்ப்பாணம், நவ. 26

தற்போது நிலவும் சீரற்ற வானிலையால் காரைநகரில் 4 வீடுகள் சேதமடைந்துள்ளன. அத்துடன், 2 குடும்பங்களை சேர்ந்த 8 பேர் இடம்பெயர்ந்துள்ளனர் என்று மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு பணிப்பாளர் சூரியராஜ் தெரிவித்தார்.

மோசமான வானிலையால் ஏற்பட்ட பாதிப்புக்கள் குறித்து அவர் நேற்று தெரிவிக்கையில்,

நேற்று முதல் பெய்தமழை மற்றும் அதிக காற்று காரணமாக 195 குடும்பங்களை சேர்ந்த 632 நபர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நான்கு வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. 2 குடும்பங்களை சேர்ந்த 8 பேர் இடம்பெயர்ந்து தற்காலிகமாக உறவினர் வீடுகளில் தங்கியுள்ளனர் என்றார். (ஐ-3)

## வடமராட்சியில்...

கொண்டு செல்லப்படும்போது உயிரிழந்திருந்தார்.

அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பி. சி.ஆர் பரிசோதனையில் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதேவேளை,

பருத்தித்துறை, முதலாம் கட்டைச் சந்திப் பகுதியில் மரக்காலையில் இருந்து தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்ட சண்முகராஜா துஷ்யந்தன் (வயது 21) என்ற இளைஞருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக சுகாதாரத் தரப்பினர் தெரிவித்தனர். (அ-02)

## கொடிகள்...

முல்லைத்தீவு மாவட்டத்தில் மாவீரர் நாள் நிகழ்வுகளை முன்னெடுப்பதற்கு எதிராக ஐந்து பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள் முன்வைத்த கோரிக்கையை ஏற்று முன்னர் தடை உத்தரவுகளை நீதிமன்றம் வழங்கியது. கடந்த 17ஆம், 23ஆம் திகதிகளில் 72 பேருக்கு இவ்வாறு தடை உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டன.

இந்தத் தடை உத்தரவுகளுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட நகர்த்தல் பத்திரம் நேற்று வியாழக்கிழமை விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

வழக்கை விசாரித்த நீதிவான் ரி. சரவணராஜா தனது தீர்ப்பில், "தடை செய்யப்பட்ட அமைப்பின் உறுப்பினராயினும் அந்த அமைப்பின் கொடிகள் அடையாளங்களை நினைவுபடுத்தக் கூடியதாக அல்லாமல் நினைவுகூரல்களை மேற்கொள்ளலாம். இறந்தவர்களுக்கு பொதுவான நினைவுகூரல்களை நடத்தமுடியும். இறந்தவர்கள் யாராக இருந்தாலும் அவரை நினைவுகூருவது மனுடப் பண்பு", என்று குறிப்பிட்டார். அத்துடன், முன்னர் நீதிமன்றால் வழங்கப்பட்ட தடைக் கட்டளையையும் திருத்தியமைத்தார்.

இந்தத் தீர்ப்பின் மூலம் முல்லைத்தீவு மாவட்டத்தில் மாவீரர் நாளை நினைவேந்த விதிக்கப்பட்ட தடைக் கட்டளை மாற்றி அமைக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கில் சட்டத்தரணிகளான கேசவன் சயந்தன், வி. எஸ். எஸ் தனஞ்சயன், ருஜிக்கா நித்தியானந்தராசா, க. கணேஸ்வரன் ஆகியோர் மன்றில் முன்னிலையாகினர். (ஐ)

## ஐரோப்பிய...

வருமாறு:

ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை தொடர்பில் எதிரணி உறுப்பினர்கள் கருத்துகளை முன்வைத்து வருகின்றனர். அது தொடர் பில் நாம் பல விடயங்களை செய்துவருகின் றோம்.

எமது நாட்டிலுள்ள பயங்கரவாத தடைச்சட் டம் 42 வருடங்கள் பழமையானது, அதை முழு மையாக இரத்து செய்ய மாட்டோம். திருத்தி அமைக்கப்படும். அதற்கான யோசனைகள் சபையில் முன்வைக்கப்படும். அச்சுறுத்தல்களுக்கு பணிந்து நாம் தீர்மானம் எடுப்பதில்லை.

ஐரோப்பிய ஒன்றிய தூதுவரை நாளை(இன்று) சந்தித்து பேச்சு நடத்தவுள்ளேன். அதன்போது இது பற்றி தெளிவுபடுத்தப்படும். சர்வதேசத்துடன் சிறந்த உறவை பேணிவருகின்றோம்-என்றார். (அ)

## யாழ்.பல்கலை...

இராணுவத்தினரும் பொலிஸாரும் அரச புலனாய்வுப் பிரிவினரும் மாணவர்களை அச்சுறுத்தும் வகையில் பல்கலைக்கழகச் சூழலில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டு வரும் நிலையில் மாணவர்கள் இந்த நினைவேந்தல் நிகழ்வை நடத்தினர். (அ-03)

## கொரோனா...

உறுதிப்படுத் தப்பட் டுள்ளன என்று அரச தகவல் திணைக் களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் இதுவரையில் கொரோனாத் தொற்றால் மரணித்தோரின் மொத்த எண்ணிக்கை 14 ஆயிரத்து 232 ஆக அதிகரித்துள்ளது. (இ)

## நல்லெண்...

மக்களும் சுதந்திரமாக வாழக்கூடிய சூழல் ஒன்று இலங்கையில் காணப்படுகின்றது என்றும் கூறியுள்ளார்.

இலங்கை வந்துள்ள ஐ. நாவின் அரசியல், சமாதானத்தை கட்டியெழுப்பும் மற்றும் சமாதான நடவடிக்கைகளுக்கான உதவி செயலாளர் காலித் கியாரி நேற்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை சந்தித்தார். ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற இந்த சந்திப்பில் கலந்துரையாடப்பட்டவை தொடர்பில் ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு வெளியிட்ட அறிக்கையின் முக்கிய அம்சங்கள் வருமாறு,

"2009ஆம் ஆண்டில் யுத்தம் நிறைவு பெற்றதன் பின்னர், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அரசாங்கம் நடைமுறைப்படுத்திய அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் மூலம் அந்தப் பிரதேசங்கள் துரித வளர்ச்சி கண்டன.

"இலங்கைக்கு வருகை தருகின்ற அனைத்து இன மக்களுடனும் ஒன்றிணைந்து செயல்படும் நோக்கத்தில், ஐ. நா. சபைக் கூட்டத்தொடரில் கலந்துகொண்ட சந்தர்ப்பத்தில் தாம் புலம்பெயர் தமிழருக்கு விடுத்த அழைப்பை இதன்போது ஜனாதிபதி நினைவுகூர்ந்தார். அதுபற்றி நல்லெண்ணத்துடன் செயல்படுவார்களென்று எதிர்பார்க்கிறார் என்றும் ஜனாதிபதி இதன்போது குறிப்பிட்டார்.

"அனைத்து இன மக்களும் சுதந்திரமாக வாழக்கூடிய சூழல் ஒன்று இலங்கையில் காணப்படுகின்றது. நீதி அமைச்சர் ஒரு முஸ்லிமாக இருக்கிறார் என்றும் நீதியரசர் ஒரு தமிழராக இருப்பதாகவும், மேலும் பல்வேறு விசேட பதவிகளை வகிப்போர் ஏனைய இனங்களை சேர்ந்தவர்கள் என்றும் ஜனாதிபதி சுட்டிக் காட்டினார்.

"இனங்களுக்கிடையில் ஒற்றுமையை கட்டியெழுப்புவதற்காக அரசாங்கம் பெரும் நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துவதாகவும் அது தொடர்பாக எவ்வித சந்தேகமும் கொள்ளவேண்டாம் என்றும் ஜனாதிபதி கூறினார்" என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# வடக்கு - கிழக்கில் சில பிரதேசங்களில் 100 மி.மீ கனமழை வீழ்ச்சி எதிர்பார்ப்பு

கொழும்பு, நவ. 26

வடக்கு, வடமத்திய, வடமேல், மேல், சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களில் சில இடங்களில் 100 மி.மீ அளவான பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது என்று வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

நேற்று மாலை நிலவரப்படி வளிமண்டலவியல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இலங்கைக்கு தென்கிழக்காகவும் அண்மையாகவுள்ள தென்மேற்கு வங்காள விரிகுடாவிலும் காணப்பட்ட கீழ் வளிமண்டலத் தளம்பல் நிலை ஒரு குறைந்த அழுத்தப் பிரதேசமாக விருத்தியடைந்து தற்போது இலங்கைக்கு கிழக்காக நிலைகொண்டுள்ளது.

நாடு முழுவதும் மேகமூட்டமான வானம் காணப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

வடக்கு, வடமத்திய, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களிலும் மாத்தளை மாவட்டத்திலும் அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

நாட்டின் ஏனைய பிரதேசங்களில் பல இடங்களில் பிற்பகலில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

வடக்கு, வடமத்திய, வடமேல், மேல், சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களில் சில இடங்களில் 100 மி.மீ அளவான பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

நாட்டின் ஏனைய பிரதேசங்களில் சில இடங்களில் 75 மி.மீ க்கும் அதிகமான ஓரளவு பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப்பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள் - என்றுள்ளது.

# மரண அறிவித்தல்

அன்னை மடியில் 18 - 03 - 1942



ஆண்டவன் அடியில் 21 - 11 - 2021

## டாக்டர் மாலினி ஸ்ரீநிவாசன்

(1970களில் யாழ். போதனா மருத்துவமனையில் கடமையாற்றியவர்)

உரும்பிராய் வடக்கைப் பிறப்பிடமாகவும், லண்டன் Wanstead ஐ வசிப்பிடமாகவும் கொண்ட Dr.மாலினி ஸ்ரீநிவாசன் அவர்கள் 21.11.2021 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்ற சிவகுரு - நல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற வன்னித்தம்பி - லக்ஷ்மி தம்பதியரின் அன்பு மருமகளும், வன்னித்தம்பி ஸ்ரீநிவாசன் அவர்களின் அன்பு மனைவியும்,செந்தூரன், பிரியதர்ஷினி ஆகியோரின் அன்புத் தாயாரும், றோகனா, வில்லியம் ஆகியோரின் அன்பு மாமியாரும், ஏமி சிவாஞ்சலி, சியன்னா ஜனனி, எமிலி லக்ஷ்மி, ஜெயன், நெகா ஆகியோரின் பாசமிகு பாட்டியும், Dr நிர்மலானந்தன், கமலபவானி (கனடா), விஜயபவானி (கொழும்பு), சகஜானந்தன்(கனடா), பிரமானந்தன் (கொழும்பு), அமிர்தபவானி, அற்புதானந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், ராஜராஜேஸ்வரி, காலஞ்சென்ற செல்வராஜா, சுரேந்திரன் வீரவாகு (கொழும்பு), துளசி (கனடா), நசீரா (கொழும்பு), தர்மராஜா, கிருஷாந்தி, காலஞ்சென்ற விமலச்சந்திரன், Dr.ஜெகப்பிரகாசன் (அமெரிக்கா), வசந்தி, ஆனந்தி (கொழும்பு) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

*தகனம்:*
Sunday, 28 Nov 2021 - 12:00 Noon - 1 PM City of London Cemetery & Crematorium (limited seating capacity of 90 people's only)For condolence messages: srinivasan.messages@gmail.com

*கிரியை*
Sunday, 28 Nov 2021 9:00 AM - 11:15 AM
Newham Town Hall London E6 6ES, United Kingdom

*தகனம்*
Sunday, 28 Nov 2021 12:00 PM - 1:00 PM
City of London Cemetery & Crematorium Aldersbrook Rd, London E12 5DQ, UK

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
**குறுந்தகவல்** - +447938552150
**அற்புதானந்தன் (சகோதரன்)**
+447917167475

*தகவல்:*
**குடும்பத்தினர்.**

## இ. போ. ச. பஸ் காரைநகரில் விபத்து

யாழ்ப்பாணம், நவ. 26

தனியார் பேருந்தும், இலங்கை போக்குவரத்து சபையின் (இ. போ. ச.) பேருந்தும் ஒன்றையொன்று முந்திச் செல்ல முயன்றபோது, இ. போ. ச. பஸ் மின்கம்பத்துடன் மோதுண்டு விபத்துக்குள்ளானது.

யாழ்ப்பாணம் - காரைநகர் இடையே போக்குவரத்து சேவையில் பஸ்ஸே நேற்று வியாழக்கிழமை இவ்வாறு விபத்துக்குள்ளானது.

காரைநகரில் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்தும் ஒன்றையொன்று முந்திச் செல்ல முற்பட்ட வேளை பாதையை விட்டு விலகிய இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்து மின் கம்பத்துடன் மோதியது. இதன்போது பயணிகளுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்பட வில்லை. எனினும், இ. போ. ச. பேருந்தின் முன்பகுதி சேதமடைந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ-3)

## உலக உணவு திட்ட அதிகாரிகள் யாழ். வந்தனர்

யாழ்ப்பாணம், நவ. 26

ஐக்கிய நாடுகள் உலக உணவுத் திட்டத்துக்கான இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி அப்துர் ரஹீம் சிட்டுஹி மற்றும் அவரின் அதிகாரிகள் ஆகியோர், யாழ். மாவட்ட செயலாளர் கணபதிப்பிள்ளை மகேசனை நேற்று சந்தித்தனர்.

யாழ். மாவட்ட செயலகத்துக்கு மரியாதை நிமித்தமான சந்திப்பே இது இடம்பெற்றது.

இந்த சந்திப்பில், உலக உணவு திட்டத்தால் யாழ். மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்டு வரும் செயல்பாடுகள் பற்றி விரிவாக கலந்துரையாடப்பட்டன.

குறிப்பாக உணவுப் பாதுகாப்பு, போசாக்கு குறைபாடு, பாடசாலை மாணவர்களின் மதிய உணவுத் திட்டம் மற்றும் ஜீவனோபாயத் திட்டங்கள் என்பவை தொடர்பாக கலந்துரையாடப்பட்டதுடன், எதிர்கால திட்டங்கள் பற்றியும் கருத்து தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## வடமாகாண மரநடுகை மாதம் 26 கார்த்திகை 2021

"குடிமக்கள் செய்யக்கூடிய சிறிய பணிகளே பெரிய மாற்றங்களை உண்டு பண்ணும். என்னால் செய்யக்கூடிய சிறிய பணி மரங்களை நடுவதுதான்"

**- லங்காரி மாதாய் (அமைதிக்கான நோபல் விருது பெற்ற கென்யாவின் பசுமைப் போராளி)**

### CHANNEL-1 — 26.11.2021 வெள்ளிக்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | தமிழ் |
| 08.15 | தரம்-10 | வரலாறு |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | வரலாறு |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பமும் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | விவசாய விஞ்ஞானம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | மனைப்பொருளியல் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | வர்த்தகம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | சித்திரம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கலைப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் மறுஒளிபரப்பு அனைத்துப் பாடங்களும் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | வரலாறு |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பமும் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | விவசாய விஞ்ஞானம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | மனைப்பொருளியல் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | வர்த்தகம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | சித்திரம் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | வரலாறு |

### CHANNEL - 2 — 26.11.2021 வெள்ளிக்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | அழகியல் |
| 09.00 | தரம்-02 | English |
| 09.45 | தரம்-03 | அழகியல் |
| 10.30 | தரம்-03 | கணிதம் |
| 11.15 | தரம்-04 | English |
| 12.30 | தரம்-04 | கணிதம் |
| 01.15 | தரம்-05 | Singalam |
| 02.00 | தரம்-05 | கணிதம் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | English |
| 06.00 | தரம்-03 | அழகியல் |
| 06.45 | தரம்-03 | கணிதம் |
| 07.30 | தரம்-04 | English |
| 08.15 | தரம்-04 | கணிதம் |
| 09.00 | தரம்-05 | சிங்களம் |
| 09.45 | தரம்-05 | கணிதம் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | அழகியல் |
| 12.30 | தரம்-03 | கணிதம் |
| 01.15 | தரம்-04 | English |
| 02.00 | தரம்-04 | கணிதம் |
| 02.45 | தரம்-05 | Singalam |
| 03.30 | தரம்-05 | கணிதம் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

ஈழநாடு
Eelanadu
26.11.2021 வெள்ளிக்கிழமை
பிலவ வருடம், கார்த்திகை 10

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: editor@eelanadu.lk,
news@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

## மைத்திரியின் எச்சரிக்கை

அரசாங்கத்திடம் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் இருக்கின்றது - ஆனால், அதில் எங்களுடைய 14 உறுப்பினர்களும் இருக்கின்றனர், என்பதை மனதில் வைத்துக் கொண்டு பேச வேண்டுமென்று முன்னாள் ஜனாதிபதியும், சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவருமான, மைத்திரிபால சிறிசேன பாராளுமன்றில் தெரிவித்திருக்கின்றார். மைத்திரியின் மேற்படி கூற்று இன்றைய சூழலில் பல்வேறு கோணங்களில் முக்கியத்தும் பெறுகின்றது.

பொருளாதார நெருக்கடிகளிலிருந்து மீள முடியாத நிலையிலிருக்கும் அரசாங்கமானது, உள்ளுக்குள்ளும் முரண்பாடுகளின் பிடியில் சிக்கியிருக்கின்றது. பங்காளிக் கட்சிகள் திருப்திகரமாக இல்லை. இதன் காரணமாகவே அவ்வப்போது பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் முரண்பாடான அறிக்கைகளை வெளியிட்டு வருகின்றனர்.

இப்போது இல்லாவிட்டாலும் பொருத்தமான ஒரு சூழலில் அவர்கள் வெளியேற மாட்டார்கள் என்பதற்கு எவ்வித உத்தரவாதம் இல்லை. அவர்கள் அனைவரும் சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையில் ஒரு மாற்று அணியாகவும் தொழில்படுவதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றன. இவ்வாறானதொரு சூழலில்தான், மைத்திரிபால மேற்படி கருத்தை வெளியிட்டிருக்கின்றார்.

புதிய அரசியல் யாப்பு தொடர்பில் அரசாங்கம் பேசிவரும் சூழலில் மைத்திரியின் மேற்படி அறிவிப்பு, அரசியல் ரீதியில் மிகவும் முக்கியமானது. ஜனாதிபதி தான் நினைப்பது போன்றதோர் அரசியல் யாப்பை கொண்டுவர வேண்டுமாயின் - இன்றிருக்கும் சூழலில் சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆதரவு கட்டாயமான ஒன்று. இதேவேளை பங்காளிகளும் புதிய அரசியல் யாப்பு விடயத்திற்கு ஒத்துழைப்பு வழங்காவிட்டால் - அரசாங்கத்தின் மூன்றில் இரண்டு கதை முடிவுக்கு வந்துவிடும்.

ஓர் அரசாங்கம் விமர்சனங்களை சந்திக்கும்போது, அதற்கு முன்னிருந்த அரசாங்கம் தொடர்பில் சிந்திக்கப்படுவது இயல்பான ஒன்று. சிங்கள மக்களின் மத்தியில் பெரும் எதிர்பார்ப்புடன் நோக்கப்பட்ட ராஜபக்ஷக்களின் மொட்டு அரசாங்கம் தொடர்ந்தும் சரிவை சந்தித்துவரும் சூழலில், மைத்திரி தலைமையிலான கூட்டு அரசாங்கம் தொடர்பில் சாதகமான அபிப்பிராயங்கள் ஆங்காங்கே எட்டிப் பார்க்கின்றன. மைத்திரியின் மீதான விமர்சனங்கள் காணமால் போய், அந்த இடத்தில் மொட்டு அரசாங்கமே அதிருப்தியுடன் நோக்கப்படும் நிலைமை காணப்படுகின்றது.

இதன் காரணமாகவே அவ்வப்போது மைதிரியை சீண்டும் அரசியலையும் மொட்டு அணியினர் மேற்கொள்கின்றனர். ஆரம்பத்தில் அமைதியாக இருந்த மைத்திரி அணியினர், அரசாங்கம் நெருக்கடிகளை சந்திக்கும் தருணத்தை துல்லியமாகக் கணித்து, தற்போது உடனுக்குடன் பதிலளிக்கின்றனர். இதனால் மொட்டு அணியினருக்கும் சிறீலங்கா சுதந்திரக் கட்சி அணியினருக்கும் இடையில் ஒரு பனிப்போர் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றது. இதன் உச்சம்தான் மைத்திரியின் மேற்படி அறிவிப்பு.

அரசியலில் எதுவும் எப்போதும் நடக்கலாம். தென்னிலங்கையின் அரசியல் நிலைமை அந்தளவுக்கு சிக்கல்கள் நிறைந்ததாகவே இருக்கின்றது. இந்த அடிப்படையில் நோக்கினால் மைத்திரிபால சிறிசேன அரசாங்கத்திற்குள் ஒரு 'கிங் மேக்கராக' மாறுவதற்கான வாய்ப்பும் உள்ளது. மைத்திரிபாலவை ஒரு 'ஜோக்கராக' பார்த்தவர்களுக்கு மத்தியில் அவரின் அரசியல் தோற்றம் இப்போது மெதுவாக மாறிவருகின்றது.

# சர்வதேச சமூகத்தின் அவதானமல்ல பங்களிப்பே தேவை!

**- அலசுவது இராஜதந்திரி -**



இலங்கையில் இனப்பிச்னை தீர்வு குறித்து நோர்வே அனுசரணையாளராக 2002 ஆம் ஆண்டு பங்களிப்புச்செய்ய முன்வந்த வேளை நோர்வேக்கு இணை அனுசரணையாளராக அமெரிக்கா, பிரிட்டன், ஜப்பான், சுவீடன், இந்தியா ஆகியவை விளங்கியிருந்தன.

இருந்தபோதிலும் நோர்வேயின் சமாதான முயற்சி தோல்வியைத் தழுவி வடக்கு - கிழக்கில் போரால் பேரழிவு ஏற்பட்டதே வரலாறாகியிருந்தது. 2009ஆம் ஆண்டு யுத்தம் முடிவுக்கு வந்ததிலிருந்து வடக்கு - கிழக்கின் தமிழ் அரசியல் தரப்பு அரசியல் தீர்வில் பூரண நம்பிக்கை வைத்து இன்றுவரை சமஷ்டி முறையிலான அதிகாரப் பரவலாக்கத்துடன் கூடிய அரசியல் தீர்வுக்காக சர்வதேச சமூகத்தை இடையறாது கோரி வருவதையே அவதானிக்க முடிகின்றது.

ஆனால், சர்வதேச பிரதிநிதிகள் இலங்கை வரும்போது அல்லது வடக்கு - கிழக்கு தமிழ் அரசியல் தரப்பினர் வெளிநாடுகளுக்கு செல்லும்போது இடம்பெறும் சந்திப்புகளில் இலங்கையில் வடக்கு - கிழக்கு தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றும் விதத்திலான கோரிக்கைகள் முன்வைக்கப்படும்போது சர்வதேச சமூகத்தின் பிரதிநிதிகள் வெறுமனே தமது அவதானிப்புகளை மட்டுமே வெளியிட்டு வருகின்றனர். அத்துடன், வடக்கு - கிழக்கு மக்களின் அரசியல் பிரச்னைகள் மற்றும் மனிதாபிமான பிரச்னைகளுக்கு உரிய அணுகுமுறைகள் மூலம் இலங்கை அரசாங்கத்துக்கு, ஒரு நிரந்தர தீர்வுக்கான அழுத்தங்களை பிரயோகிக்க தவறியும் வருகின்றனர்.

தற்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் தலைமையிலான தமிழ் பிரதிநிதிகள் குழுவொன்று அமெரிக்காவில் இராஜாங்க அமைச்சின் உதவிச் செயலாளரை சந்தித்துள்ளனர். அமெரிக்க ஜனாதிபதியாக ஜோ பைடன் பதவியேற்ற பின்னர் இலங்கை தமிழர் தரப்பினர் அமெரிக்காவில் உயர் மட்ட சந்திப்பொன்றை நடத்தியுள்ளமை இதுவே முதல் தடவையாகும்.

2015ஆம் ஆண்டு நல்லாட்சி அரசாங்கம் அன்றைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் அமைக்கப்பட்டபோது அப்போதைய வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவின் அழைப்பின் பேரில் அன்றைய அமெரிக்க இராஜாங்க செயலாளர் ஜோன் கெரி இலங்கைக்கு வந்திருந்தார்.

இலங்கையில் ஜோன் கெரி அப்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனையும் சந்தித்திருந்தார். அப்போது ஜோன் கெரி நல்லிணக்க நடவடிக்கைகள் இலங்கையில் இடம்பெற்ற போரால் ஏற்பட்ட அனர்த்தங்களை நீக்கி சமாதானத்தை அடைய இன்றியமையாதவையாக இருக்கின்றன என்று குறிப்பிட்டிருந்தார். அத்துடன், சிறைகளில் இருக்கின்ற சகல தமிழ் அரசியல் கைதிகளையும் அரசாங்கம் விடுதலை செய்ய வேண்டுமெனவும் குறிப்பிட்டதோடு சர்வதேச அமைப்புகளோடு இணைந்து காணாமல் ஆக்கப்பட்டோர் பற்றி அறிய அரசாங்கம் முன்வர வேண்டும் எனவும் தெரிவித்திருந்தார்.

இலங்கையில் யுத்தம் நிறைவுற்று சமாதான சூழ்நிலைகள் ஏற்பட்டிருக்கலாம். ஆனால், உண்மையான நல்லிணக்கத்தை கட்டியெழுப்புவதற்கு நிறைய நாட்கள் தேவைப்படும் எனவும் கொழும்பில் அன்று கருத்து வெளியிட்ட அமெரிக்க இராஜாங்க செயலாளர் ஜோன் கெரி தெரிவித்திருந்தார்.

அமெரிக்க இராஜாங்க செயலாளராக இருந்த ஜோன் கெரி, வியட்நாம் யுத்த காலத்தில் அமெரிக்க இராணுவத்தில் பணியாற்றிய ஓர் இராணுவ வீரர் என்பதுவும் குறிப்பிடத்தக்கது.


எனவே, அமெரிக்கா இலங்கை இனப்பிரச்னை விவகாரத்தை பல்வேறு கோணங்களிலும் நன்கறிந்து வைத்துள்ளது. இந்நிலையில் தற்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் தலைமையிலான குழுவொன்று அமெரிக்காவின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கு பொறுப்பான உதவி இராஜாங்க செயலாளர் டொனால்ட் லூவை சந்தித்துள்ளது.

அந்த சந்திப்பின்போதே உதவி இராஜாங்க செயலாளர் டொனால்ட் லூ தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளைப் பூர்த்தி செய்ய அமெரிக்கா துணை நிற்கும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, பிட்டனின் வெளிவிவகார மற்றும் பொதுநலவாய அலுவலகம் இலங்கையில் மனித உரிமைகள் நிலவரம் மோசமான நிலையில் இருப்பதாகவும் சுட்டிக் காட்டியுள்ளது.

எனவே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிரதிநிதிகளின் அமெரிக்க விஜயத்தின்போது பிரதிபலித்தவை மற்றும் பிரிட்டனின் வெளிவிவகார - பொது நலவாய அலுவலகத்தின் அறிக்கை என்பவற்றை நோக்கும்போது சர்வதேச சமூகம் இலங்கையின் வடக்கு - கிழக்கு தமிழர் தொடர்பில் ஆக்கபூர்வமான பங்களிப்பை செய்வதை விடுத்து அவதானிகளாக இருந்து தமது கருத்துக்களை வெளியிட்டு வருவதையே அறிய முடிகின்றது.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



**நவம்பர் - 26 வெள்ளிக்கிழமை**
**பிலவ வருடம் - கார்த்திகை - 10**
**நல்ல நேரம் : 9.00 - 10.30**
**ராகு காலம் : 10.30 - 12.00**
**திதி : சப்தமி**




**மேடம்**
குடும்பத்தினரின் செயல்பாடுகள் காரணமாக மகிழ்ச்சி ஏற்படும். முயற்சிகளில் முன்னேற்றம் ஏற்படும். எதிர்பார்த்த பணவரவு உண்டு. வசதிவாய்ப்புகள் அதிகரிக்கும் நாள். வரவு திருப்தி தரும்.

**இடபம்**
நேர்த்தியாகப் பணிகளை செய்து முடித்து மகிழ்வீர்கள். அலைச்சல் ஏற்படும். உழைப்பிற்கேற்ற நல்ல பலன் கிடைக்கும். சிறு சிறு பிரச்னைகளை தவிர்த்து நிம்மதி அடைவீர்கள்.

**மிதுனம்**
அக்கம்பக்கத்தினரிடம் சுமுகமாக நடந்து கொண்டு நற்பெயர் பெறுவீர்கள். உங்களை விட உயர்ந்தோர் நட்பு இன்று கிடைக்கும். பிறரது சிரமத்தை புரிந்து கொண்டு உதவுவீர்கள்.

**கடகம்**
முயற்சியால் குடும்பத்தில் இருந்த சிரமங்கள் தீரும். குதுாகல நிகழ்வு ஒன்றில் பங்கேற்பீர்கள். பல நாள் சந்தேகம் தீரும். விரும்பிய பொருளை வாங்குவீர்கள். அலைச்சல் அதிகமாக இருக்கும்.

**சிம்மம்**
மனதில் இதுவரை இருந்து வந்த இறுக்கமான நிலை மாறும். பணியாளர்களுக்கு விரும்பிய இடமாற்றமும், பதவி உயர்வும் கிடைக்கும். நின்று போன பணி ஒன்றை இன்று தொடருவீர்கள்.

**கன்னி**
உடன் பணிபுரிபவர்களுடன் சுமுகமாக நடந்து கொள்வீர்கள். புதிய நண்பர் ஒருவரால் நன்மை நிகழ்ந்து உங்களை மகிழ்விக்கும். இத்தனை நாட்களை விட இன்று அதிக வழிபாடு செய்வீர்கள்.

**துலாம்**
பணியாளர்கள் கடமை ஒன்றை முடித்து நிம்மதி அடைவீர்கள். முயற்சி செய்து உங்களது சுய தேவையை நிறைவு செய்து கொள்வீர்கள். தொழில் அல்லது பணியில் ரகசியம் ஒன்று தெரிய வரும்.

**விருட்சிகம்**
உடன் பிறந்தவர்களுடன் உல்லாசமாகப் பொழுது போகும். நீங்கள் முன்பு செய்த தவறு ஒன்று இன்று மன்னிக்கப்படும். குடும்பத்தில் ஒருவரின் நீண்ட நாள் ஆசையை நிறைவேற்றுவீர்கள்.

**தனுசு**
கடன் தொல்லைகளில் இருந்து ஓரளவு விடுபடுவீர்கள். எதற்காகவும் குறுக்கு வழிகளை நாட வேண்டாம். செயல்களில் மிகுந்த கவனமும், நேர்மையும் தேவை.

**மகரம்**
தன்னம்பிக்கை அதிகரிக்கும். புதுமைகள் செய்வீர்கள். சிரமத்தைத் தவிர்க்க வழி கண்டறிந்து நிம்மதி பெறுவீர்கள். அழகுணர்ச்சி அதிகரிக்கும். செலவு கூடும். பயம் தீரும்.

**கும்பம்**
வருமானம் உயரும். வருங்காலத் திட்டங்கள் நிறைவேறும். பொறுப்புகள் உங்களை தேடி வரும். மற்றவரால் மதிக்கப்படுவீர்கள். சகோதர, சகோதரிகளுடன் இருந்த மனத்தாங்கல் நீங்கும்.

**மீனம்**
உங்களை மற்றவர்கள் புதிர் போல் பார்ப்பார்கள். சிறு சிறு செலவுகள் வரலாம். பகைவர்கள் மனம் மாறுவர். குழந்தைகளிடம் இருந்து நற்செய்தி வரும். நல்ல நட்பு கிடைக்கும்.

# பேரறிவாளனுக்கு மேலும் 30 நாள் ‘பரோல்’ 6 ஆவது முறையாக நீடித்தது தமிழக அரசு

*சென்னை, நவ. 26*

*இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சிறைத் தண்டனை அனுபவித்து வரும் பேரறிவாளனுக்கு ஆறாவது தடவையாகவும் 30 நாள்களுக்கு தமிழக அரசு பரோல் வழங்கியுள்ளது. தொடர்ந்து மருத்துவ சிகிச்சை பெறவதற்கு வசதியாக மேலும் ஒரு மாத காலத்துக்கு பரோல் வழங்குமாறு பேரறிவாளனின் தாயார் அற்புதாம்பாள் கோரிக்கை விடுத்த நிலையிலேயே இவ்வாறு மேலும் 30 நாள்களுக்கு பரோல் வழங்கப்பட்டுள்ளது.*

*பேரறிவாளன் 30 ஆண்டு காலமாக சிறை தண்டனை அனுபவித்து வருகிறார். சிறுநீரகத் தொற்று, வயிறு சம்பந்தமான பாதிப்புகள் காரணமாக பரோல் வழங்க வேண்டி அவரது தாயார் அற்புதம்மாள் கடந்த மே மாதம் தமிழக முதலமைச்சருக்கு மனு அனுப்பியிருந்தார். மனுவை பரிசீலித்த முதல்வர் 30 நாட்கள் சாதாரண விடுப்பு வழங்கி உத்தரவிட்டார்.*



*அதன் அடிப்படையில் கடந்த மே மாதம் 28 ஆம் திகதி சென்னை புழல் சிறையில் இருந்த பேரறிவாளனை 20-க்கும் மேற்பட்ட துப்பாக்கி ஏந்திய பொலிஸாரின் பலத்த காவலுடன் அவரது சொந்த ஊரான ஜோலார்பேட்டையில் உள்ள வீட்டிற்கு அழைத்து வரப்பட்டார்.*

*அவரது தாயார் அற்புதம்மாள் ஒவ்வொரு மாதமும் பரோல் நீட்டிக்க கோரி தமிழக அரசுக்கு மனு அளித்து வந்தார். அதன்படி 5 முறை பரோல் நீட்டிக்கப்பட்டு நேற்று வியாழக்கிழமை முடிந்து, சென்னை புழல் சிறைக்கு பேரறிவாளன் அழைத்துச் செல்லப்பட இருந்தார்.*

*இந்த நிலையில் பேரறிவாளனின் தாயார் அற்புதம்மாள் மேலும் பரோல் நீட்டிக்க மனு அனுப்பி இருந்தார். அதனை பரிசீலித்த தமிழக அரசு பேரறிவாளனுக்கு 6 ஆவது முறையாக மேலும் 30 நாட்கள் பரோலை நீட்டித்து நேற்று தமிழக அரசு நேற்று பிறப்பித்துள்ளது.*

# 2026 ஆம் ஆண்டு தமிழகத்தில் பா.ஜ.க ஆட்சி ஏற்படுத்தப்படும்

## மாநில தலைவர் அண்ணாமலை பேச்சு

*சென்னை, நவ. 26*

*2026 ஆம் ஆண்டு தமிழகத்தில் பா. ஜ. க. ஆட்சி மலரும் என்று மாநில பாஜக தலைவர் அண்ணாமலை தெரிவித்துள்ளார்.*

*திருப்பூர் பா. ஜ. க. மாவட்ட அலுவலகத் திறப்பு விழா திருப்பூர் வித்யாலயம் பகுதியில் நேற்று நடந்தது. இதில் கட்சியின் தேசியத் தலைவர் ஜே.பி. நட்டா பங்கேற்றார்.*

*இந்த நிகழ்வில் பா. ஜ. க. தமிழக மாநிலத் தலைவர் அண்ணாமலை பேசும்போது, “பா. ஜ. கவில் 18 கோடி பேர் உறுப்பினர்களாக உள்ளோம். பா. ஜ.*



*கவால் கண்டெடுக்கப்பட்டு, ஒவ்வொரு நிலையாக உயர்ந்து, இன்றைக்கு மத்திய அமைச்சராக எல்.முருகன் உள்ளார். நயினார் நாகேந்திரன் அ. தி. மு. கவை விட்டுவிட்டு, இன்றைக்கு பா. ஜ. கவில் சேர்ந்து பா. ஜ. கவில் சட்டப்பேரவைக் குழுத் தலைவராக உள்ளார்.*

*பா. ஜ. க. ஆட்சிக்கு வரவேண்டும் என்றால், மாவட்டந்தோறும் அலுவலகங்கள் அமைய வேண்டும். 2026 ஆம் ஆண்டு தமிழகத்தில் பா. ஜ. க. ஆட்சி மலரும். 118 கோடி டோஸ், இந்தியாவிலேயே தயாரித்து தடுப்பூசியை அனைவருக்கும் மோடி வழங்கி உள்ளார். இது மிகப்பெரிய சாதனை.*

*வரும் உள்ளாட்சித் தேர்தல் மட்டுமின்றி, அனைத்துத் தேர்தல்களிலும் பா. ஜ. க. வெற்றி பெற, இந்த அலுவலகக் கட்டடங்கள் நமக்குப் பயன்படும்” என்றார்.*

# வேதா இல்ல சாவியை பெறுவதோடு எல்லாம் முடிந்துவிடப்போவதில்லை



## -தீபா

சென்னை, நவ. 26

தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதா வாழ்ந்த வேதா இல்லத்தை அரசுடைமையாக்கிய சட்டம் செல்லாது என்று சென்னை உயர் நீதிமன்றம் வழங்கியிருக்கும் தீர்ப்புக்கு ஜெ.தீபா வரவேற்பு தெரிவித்துள்ளார்.

மேல்முறையீடு செய்தாலும் சட்டரீதியாக சந்திப்போம் எனவும் அவர் கூறியுள்ளார்.

முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா வாழ்ந்த வேதா இல்லத்தை அரசுடைமையாக்கிய சட்டம் செல்லாது என்றும், அதனை மனுதாரர்களான தீபா, தீபக்கிடம் 3 வாரத்துக்குள் ஒப்படைக்க வேண்டும் என்றும் சென்னை உயர் நீதிமன்றம் நேற்று முன்தினம் உத்தரவிட்டது.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட தீபா தெரிவித்ததாவது:

“எனது அத்தை ஜெயலலிதாவின் ஆன்மா என்னை கைவிடவில்லை என நினைக்கிறேன். எங்கள் குடும்ப சொத்தை நான் அனுபவிக்க வேண்டும் என்பதே மறைந்த எனது பாட்டி, அப்பா, அத்தை உள்ளிட்டோரின் விருப்பமாக இருந்திருக்கும். அதனால் அவர்களது ஆன்மா தான் இன்று இப்படி ஒரு தீர்ப்பு வந்ததன் பின்னணியில் இருப்பார்கள் என்பது எனது நம்பிக்கை.

நிச்சயம் முதலமைச்சர் ஸ்டாலின் இந்த வழக்கில் மேல்முறையீட்டுக்கு செல்லமாட்டார் என நம்புகிறேன். அத்தையோட வீட்டுக்கு செல்வது குறித்து நான் இன்னும் எந்த முடிவும் எடுக்கவில்லை. சகோதரர் தீபக் உள்ளிட்ட அனைவருடனும் கலந்துபேசிய பிறகே அத்தையோட வீட்டுக்கு செல்வது பற்றி பேச முடியும்.

தீர்ப்பில் என்ன சொல்லப்பட்டிருக்கிறதோ, அதன்படி நாங்கள் செயல்படுவோம். வேதா இல்லத்தின் சாவியை பெறுவதோடு எல்லாம் முடிந்துவிடாது. நிறைய சம்பிரதாயங்கள் இருக்கின்றன. அதை நாங்கள் செய்யவேண்டும்” என ஜெ.தீபா மேலும் தெரிவித்தார்.

# மன்னார் மாவட்டத்தில் சீரற்ற காலநிலை நீடிப்பு

## பல குடும்பங்கள் பாதிப்பு

மன்னார், நவ. 26

**மன்னார் மாவட்டத்தில் கடந்த இரு தினங்களாக தொடரும் சீரற்ற காலநிலை காரணமாக வெள்ளப் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளதுடன் விவசாய நிலங்களில் அதிகளவு நீர் தேங்கியுள்ளதால் அதிக ளவான விவசாயிகள் மற்றும் பொது மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.**

தொடர்ச்சியாக மன்னார் மாவட்டத்தில் பெய்து வரும் கடும் மழை காரணமாக தாழ் நில கிராமங்கள் நீரில் மூழ்கியுள்ளன. அத்துடன் விவசாயச் செய்கையும் அழிவடைந்துள்ளது.

மன்னார் மாவட்ட விவசாய செய்கை அழிவு தொடர்பாக மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவினர் தரவுகளை சேகரித்து வருவதுடன் வெள்ளப் பாதிப்புகள் ஏற்பட அதிக வாய்ப்புள்ளதாக கருதப்படும் சேல்வேரி, தட்சணாமருதமடு போன்ற பகுதிகளை சேர்ந்த மக்களுக்கான முன்னாயத்த நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மழை தொடரும் பட்சத்தில் பல நூற்றுக்கணக்கான குடும்பங்கள் இடம்பெயர வேண்டிய நிலை ஏற்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

# மின்சார சபை பொறியியலாளர் தொழில்சங்க நடவடிக்கையில்!

கொழும்பு, நவ. 26

அரசாங்கத்திற்கு சொந்தமான யுகதனவி மின்னுற்பத்தி நிலையத்தின் ஒரு பகுதியை அமெரிக்க நிறுவனம் ஒன்றுக்கு வழங்கும் உடன்படிக்கை எதிராக இலங்கை மின்சார சபை பொறியியலாளர்கள் நேற்று நண்பகல் முதல் சட்டப்படி வேலை செய்யும் தொழில்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

அத்துடன், மின்சார சபையில் நிலவும் பிரச்னைகளை முன்னிறுத்தியும் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

தங்கள் கோரிக்கைகளுக்குத் தீர்வு கிடைக்க பெறும் வரையில் இந்தத் தொழில்சங்க போராட்டம் முன்னெடுக்கப்படும் என இலங்கை மின்சார சபை பொறியியலாளர் சங்கத்தின் தலைவர் சௌமிய குமாரவடு தெரிவித்துள்ளார்.

# மரநடுகை மாதத்தை முன்னிட்டு நேற்று 100 மரக்கன்றுகள் வழங்கல்



யாழ்ப்பாணம், நவ. 26

வடமாகாண மரநடுகை மாதத்தினை முன்னிட்டு (மறைந்த) மரணித்த நண்பரின் நினைவாக கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம் மற்றும் உரும்பிராய் மேற்கு கனிமொழி முன்பள்ளி மாணவர்களுக்கு பயனுள்ள சுமார் 100 மரக்கன்றுகள் உரும்பிராய் உதவும் நண்பர்கள் அமைப்பின் ஏற்பாட்டில் வழங்கப்பட்டது.

இந் நிகழ்வு நேற்று காலை 08.10 மணிக்கு ஆரம்பமானது நிகழ்வில் தமிழ்தேசிய பசுமை இயக்க தலைவரும் முன்னாள் வடமாகாண விவசாய அமைச்சருமாகிய பொன்னுத்துரை. ஐங்கரநேசன் கலந்துகொண்டு மாணவர்களுக்கு மரக்கன்றுகளை வழங்கியதோடு மரக்கன்றுகளையும் நாட்டினார்.

# கசிப்புடன் ஒருவர் கிளிநொச்சியில் நேற்றுமுன்தினம் கைது!

கிளிநொச்சி, நவ. 26

கிளிநொச்சி - பெரிய கட்டைக்காடு பகுதியில் 208 போத்தல் கசிப்பு, மற்றும் 3000 லீற்றர் கோடாவுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பெரியகுளம் கட்டைகாடு பகுதியில் சட்ட விரோதமான முறையில் கசிப்பு உற்பத்தி நடைபெறுவதாக கிடைத்த இரகசிய தகவலுக்கமைய நேற்று முன்தினம் சோதனை மேற்கொள்ளப்பட்டது.

கிளிநொச்சி பொலிஸ் அத்தியச்சகரின் உத்தரவிற்கமைய அன்றைய தினம் கிளிநொச்சி மது ஒழிப்பு பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது சட்ட விரோதமாக கசிப்பு உற்பத்தியீடுபட்ட சந்தேகநபர் கைது செய்யப்பட்டார். (ஐ)

# 'மனங்கள் ஆற மரம் ஒன்று நடுவோம்' செயல்திட்டம் கரைச்சியில் ஆரம்பம்

கிளிநொச்சி, நவ. 26

'மனங்கள் ஆற மரம் ஒன்று நடுவோம்' எனும் செயல்திட்டம் கரைச்சி பிரதேச சபையினால் நேற்று ஆரம்பிக்கப்பட்டது.

"விதையாகி எங்கள் விளைவாகி - நாளை நட்டவை மலர்ந்து நம் நிலம் மலரட்டும்" எனும் தொனிப்பொருளில் குறித்த செயல்திட்டம் கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர் அ.வேழமாலிகிதன் தலைமையில் பிரதேச சபை வளாகத்தில் இடம்பெற்றது.

பிரதேச சபையினால் மரங்கள் கொள்வனவு செய்யப்பட்டு 21 வட்டாரங்களுக்கும் சமமாக வட்டார உறுப்பினர்களிடம் பகிர்ந்தளிக்கப்பட்டன. போரால் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் வீடுகளுக்குச் சென்று குறித்த மரங்கள் வழங்கப்படவுள்ளன.

இந்நிகழ்வில் கரைச்சி பிரதேச சபையின் உபதவிசாளர் தவபாலன் பிரதேச சபையின் உறுப்பினர்கள் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# இந்த மாதத்துக்குள் மட்டும் 4 காஸ் சிலிண்டர் வெடிப்பு!

கொழும்பு, நவ. 26

நாட்டில் இந்த மாதத்தில் மட்டும் 04 சமயல் எரிவாயு சிலிண்டர் வெடிப்புச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன. இதன்படி நேற்றுக் காலை கொட்டாவ பன்னிப்பிட்டிய பிரதேசத்தில் வீடொன்றில் வெடிப்புச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த வெடிப்பு சம்பவம், எரிவாயு கசிவு காரணமாக ஏற்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர். இந்த வெடிப்பினால் குறித்த வீடு பலத்த சேதமடைந்தது. அத்துடன் வீட்டில் இருந்த எவருக்கும் காயம் ஏற்படவில்லை என பொலிஸார் கூறினர்.

இந்நிலையில், கடந்த 4 ஆம் திகதி வெலிகம, கப்பரதொட்ட பிரதேசத்தில் அமைந்துள்ள உணவகம் ஒன்றில் எரிவாயு கொள்கலனில் கசிவு ஏற்பட்டு வெடித்ததன் காரணமாக இருவர் காயமடைந்தனர். அத்துடன், கடந்த 16 ஆம் திகதி இரத்தினபுரி பகுதியில் உள்ள உணவகம் ஒன்றிலும், எரிவாயு கொள்கலன் வெடித்தது. கடந்த 20 ஆம் திகதி கொழும்பில் உள்ள உணவகம் ஒன்றில் எரிவாயு கொள்கலன் வெடித்ததில் இருவர் காயமடைந்தமை குறிப்பிடத்தக்கது.



# மங்களவின் மறைவு குறித்து சந்திரிகா உருக்கமான பதிவு !

மூன்று மாதங்களுக்கு முன்னர் கொரோனாவால் காலமான முன்னாள் நிதி அமைச்சர் மங்கள சமரவீரவின் மறைவு குறித்து முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, தனது முகப்புத்தகத்தில் ஓர் உருக்கமான பதிவொன்றை இட்டுள்ளார்.

"அன்புக்குரிய மங்கள! சிறந்த நாட்டை கட்டியெழுப்புவதற்காக செய்யவேண்டிய சகல விதத்திலும் போர் செய்தீர்கள். சுதந்திரம், நேர்மையான ஆட்சிக்காக சகலரையும் ஒன்று திரட்டினீர்கள்.

பல்வகைமையை மதிக்கும் நாடு, அரசியல்வாதிகளுக்காக இல்லாமல் மக்களைப்பற்றி சிந்திக்கும் ஆட்சி முறை என சகலவற்றினதும் அடையாளம் நீங்கள்தான்.

அநீதி, ஊழல் மற்றும் மோசடி ஆகியவற்றுக்கு எதிராக குரல் கொடுக்கும் சகலரின் மனதிலும்,அவர்களின் நடவடிக்கைகளிலும் வாழ்கிறீர்கள்.

மோட்சம் அடைவதற்கு முன் நாம் கனவுக்கண்ட சுதந்திர இலங்கையை கட்டியெழுப்புவதற்கான போர்க்களத்தில் பங்கொள்ள மீண்டும் வாருங்கள்." என்று அவரது பதிவில் உள்ளது.



# பஸ்-மோ.சைக்கிள் விபத்து; பெண் ஒருவர் படுகாயம்!

யாழ்ப்பாணம்,நவ. 26

வடமராட்சியின் கரணவாய் தெற்கு- மண்டான் வீதியில் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ்ஸும் மோட்டார் சைக்கிளும் மோதி விபத்துக்குள்ளானதில் பெண் ஒருவர் படுகாயங்களுக்கு உள்ளான நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார்.

நேற்று வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் இவ் விபத்து இடம்பெற்றுள்ளது.

இவ்விபத்தில் வாதரவத்தை பகுதியைச் சேர்ந்த எஸ்.சிவகலா (வயது -30) என்பவர் மோட்டார் சைகிளில் பயணித்துக் கொண்டிருந்தபோது அரச பஸ் மோதி படுகாயங்களுக்கு உள்ளான நிலையில் நோயாளர் காவு வண்டி மூலம் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ்போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். விபத்து தொடர்பில் நெல்லியடி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (அ-2)

# 100 கோடி ரூபாய் பெறுமதியான அரிய வகை இரத்தினக்கல் இலங்கையில் கண்டுபிடிப்பு

கொழும்பு, நவ. 26

இலங்கையில் மிகவும் அரிய வகையை சேர்ந்த இயற்கையான பெனகைட் இரத்தினக் கல்லொன்று கண்டுபிடிக்கப் பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இலங்கையில் இதுவரை கண்டெடுக்கப்பட்ட பெனகைட் இரத்தினக்கற்களில் இது மிகப்பெரியது என தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை தெரிவித்துள்ளது.

பேருவளை பகுதியை சேர்ந்த இரத்தினக்கல் வியாபாரியான மொஹமட் பஸ்ரீன் நஸீர் என்பவர் பலாங்கொடையில் இருந்து குறித்த இரத்தினக் கல்லை கொள்வனவு செய்துள்ளார்.



இந்த நிலையில் குறித்த இரத்தினக்கல்லின் எடை 616.90 கரட் எனவும், இதன் பெறுமதி சுமார் 100 கோடி ரூபாய் எனவும் குறித்த வர்த்தகர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இது தொடர்பில் தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபையின் தலைவர் திலக் வீரசிங்க கூறுகையில் இந்த இரத்தினக் கல்லானது மிகவும் அரிதானது என்பதால் விலை உயர்ந்தது என சுட்டிக்காட்டியுள்ளார்.

# எம்.பி. பதவியை துறந்தார் சமரசிங்க

கொழும்பு, நவ. 26

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் மஹிந்த சமரசிங்ஹ, தனது எம்.பி பதவியை நேற்று இராஜினாமா செய்துள்ளார்.

தனது இராஜினாமா கடிதத்தை, அவர் பாராளுமன்ற செயலாளர் நாயகத்திடம் கையளித்துள்ளார்.

இவ்வாறு எம்.பி.பதவியை துறந்த அவர் அமெரிக்கா மற்றும் மெக்ஸிக்கோவுக்கான இலங்கைத் தூதுவராக நியமிக்கப்படவுள்ளார்.



இராஜதந்திர துறையில் அனுபவம் வாய்ந்தவராகக் கருதப்படும் மஹிந்த சமரசிங்க, இலங்கையின் சார்பில் ஜெனிவாக் கூட்டத்தொடர்களிலும் பங்கேற்றுள்ளார்.



# பாவற்குளத்தின் வான்கதவு திறப்பு

வவுனியா, நவ. 26

பாவற்குளத்தின் நீர்மட்டம் தொடர்ந்தும் அதிகரித்து வருவதானால் அதன் 4 வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன. இதனால் அதன் கீழ் உள்ள பகுதிகளில் வசிக்கும் மக்களை தொடர்ந்தும் அவதானமாக இருக்குமாறு மத்திய நீர்ப்பாசன திணைக்களத்தின் பிராந்திய நீர்பாசன பொறியி லாளர் கே.இமாசலன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வவுனியாவில் கடந்த சில நாட்களாக தொடர்ந்தும் கடும் மழை பெய்து வருவகின்றது. இதன் காரணமாக பல குளங்களின் நீர் மட்டம் அதிகரித்து வான் பாய்ந்து வருவதுடன் பாவற்குளத்தின் நீர்மட்டமும் சடுதியாக அதிகரித்துள்ளது.

பாவற்குளத்தின் நீர்மட்டமானது அதன் கொள்ளவான 19.4 அடியை அடைந்துள்ளதால், அதன் இரு வான் கதவுகள் ஓர் அடிக்கும், இரு வான் கதவுகள் 9 அங்குலத்திற்கும் ஆக நான்கு வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன. அத்துடன், தொடர்ந்தும் மழை பெய்து வருவதனால் மேலும் வான் கதவுகள் ஊடாக நீர்பாயும் வீதத்தை அதிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் பாவற்குளத்தின் நீர் வழிந்தோடும் பகுதிகளில் உள்ள கந்தசாமி நகர், கிறிஸ்தவ குளம், பாவற்குளம் படிவம் 5,6,4,2,1, பீடியாபாமின் வேப்பங்குளம் ஆகிய பகுதிகளில் உள்ள மக்கள் மிகவும் அவதானமாகவும், முன்னெச்சரிக்கையுடனும் இருக்க வேண்டும்.

அத்துடன், முகத்தான்குளத்தின் நீர்மட்டம் 11 அடி 9 அங்குலமாகவும், மருதமடுக் குளம் 12 அடி 8 அங்குலமாகவும், இராசேந்திரங்குளம் 12.6 அங்குலமாகவும் உயர்வடைந்துள்ள நிலையில் இக் குளங்களும் வான் பாய்ந்து வருகின்றன. இதனால் அதன் கீழ் பகுதிகளில் வசிக்கும் மக்களும் முன் எச்சரிக்கையுடன் செயற்படுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

மேலும், ஈரப்பெரியகுளத்தின் நீர்மட்டமும் 13 அடியாக உயர்வடைந்துள்ளது. தொடர்ந்தும் மழை பெய்தால் அக் குளமும் வான் பாயும் நிலை ஏற்படும் - என்றார்.

# சர்வதேச பிடிக்குள் இருந்து நாட்டை மீட்டவரே மங்கள

## சபையில் ஹர்ஷ டி சில்வா புகழாரம்

கொழும்பு, நவ. 26

**“நெருக்கடியான காலகட்டத்தில் - சர்வதேச பிடிக்குள் இருந்து எமது நாட்டை மங்கள சமரவீரவே மீட்டெடுத்தார்.” - என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.**

பாராளுமன்றத்தில் இன்று நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்று கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

“அமரர் மங்கள சமரவீர மரணித்து இன்றுடன் மூன்று மாதங்கள் ஆகின்றன. இந்த நாட்டுக்காக சேவையாற்றியவர் அவர். நாட்டுக்கு எதிராக சர்வதேச அழுத்தங்கள் குவிந்திருந்தன. மின்சார கதிரைக்கு கொண்டுபோகபோவதாக மஹிந்த தரப்பு அறிவிப்புகளை விடுத்துவந்தன.

இவ்வாறான நெருக்கடியான சூழ்நிலையில் சர்வதேச சமூகத்துடன் பேச்சுகளை நடத்தி, பொறிக்குள் இருந்து நாட்டை மீட்டவர்தான் மங்கள. இதற்காக அவருக்கு நன்றிகூற வேண்டும். நாட்டுக்கு பைசர் தடுப்பூசிகளை பெற்றுக்கொடுப்பதிலும் தீவிரமாக செயற்பட்டவர்.” - என்றும் ஹர்ஷ குறிப்பிட்டார்.

# கார்த்திகை பூ அணிந்தமை தொடர்பில் இந்திய துணை தூதரகம் விளக்கம்!

யாழ்ப்பாணம், நவ. 26

நல்லூரிலுள்ள சங்கிலியன் பூங்காவில் கடந்த 20ஆம் திகதி நடைபெற்ற பசுமைக் கண்காட்சி தொடர்பில் யாழ்ப்பாணத்துக்கான இந்தியத் துணைத் தூதரகம் தெளிவுபடுத்தல் ஒன்றை வழங்கியுள்ளது.

யாழ்ப்பாணத்துக்கான இந்திய துணை தூதர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரன் நல்லூரில் உள்ள சங்கிலியன் பூங்காவில் கடந்த 20ஆம் திகதி நடைபெற்ற நிகழ்வில் கார்த்திகைப் பூ சூடிய விடயம் தொடர்பில் இணையத் தளங்களில் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான நிகழ்வு என திரிபுபடுத்தப்பட்டு செய்திகள் வெளியான நிலையிலேயே இந்திய தூதரகத்தால் அதற்கு மறுப்பு தெரிவிக்கப்பட்டு அறிக்கை யொன்று வெளியிடப்பட்டுள்ளது.

வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், “மரக்கன்றுகள் விநியோக நிகழ்வு தொடர்பான பல தவறான செய்திகள் ஊடகங்களில் வெளிவந்தமை கவனத்திற்கு வந்தன.

யாழ். இந்தியத் துணைத் தூதுவர் , அழைப்பின் பேரில் இந்த நிகழ்வில் கலந்து கொண்டார். அத்தகைய பங்கேற்பு அமைப்பாளர்கள் அல்லது



அவர்களின் செயல்களுடன் உத்தியோகபூர்வ நிகழ்ச்சிக்கு வெளியே, எந்த வகையிலும் சம்பந்தப்படவில்லை. இது தொடர்பில் அவருக்கு எந்த முன் அறிவித்தலும் வழங்கப்படவில்லை.“ எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# பல்கலைக்கழக மாணவர்களின் கல்வியைத் தாமதிக்கக்கூடாது

## பிரதமர் மஹிந்த அறிவுறுத்து

கொழும்பு, நவ. 26

பல்கலைக்கழக மாணவர்களின் கல்வி தாமதப்படுத்தப்படா திருப்பதை உறுதி செய்ய வேண்டும் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ வலியுறுத்தினார்.

மருத்துவ பட்டப் படிப்பை 22 வயதில் நிறைவுசெய்வது மற்றும் ஏனைய அடிப்படை பட்டப் படிப்புகளை 20 வயதில் பூர்த்தி செய்வது தொடர்பில் அரச வைத்திய அதிகாரிகளின் சங்கம் இடம்பெற்ற சந்திப்பின்போது முன்வைத்த முன்மொழிவு தொடர்பில் கவனம் செலுத்தி பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

கல்வி அமைச்சு மற்றும் உயர் கல்வி அமைச்சு ஆகியன ஏற்கனவே இது தொடர்பில் கவனம் செலுத்தி திட்டமிட்டபடி பரீட்சைகளை நடத்தி, கால தாமதமின்றி பல்கலைக்கழகங்களுக்கு இணைத்துக் கொள்ளப்பட்டு வருவதாக இச்சந்திப்பில் தெரிவிக்கப்பட்டது.

வைத்தியர்கள் உள்ளிட்ட தொழில் வல்லுநர்களிடமிருந்து வருமான வரி அறவிடுவதில் நல்லாட்சி அரசாங்கக் காலப்பகுதியில் காணப்பட்ட கொள்கைக்கு மாறாக மஹிந்த ராஜபக்ஷ யுகத்தின் வரி கொள்கையை அமுல்படுத்துமாறு அரச வைத்திய அதிகாரிகளின் சங்கத்தின் சார்பில் விசேட மருத்துவ நிபுணர் அனுருத்த பாதெனிய இச்சந்திப்பின் போது கேட்டுக் கொண்டார்.

12 சதவீதமாகக் காணப்பட்ட வருமான வரி நல்லாட்சி அரசாங்கத்தினால் 24 சதவீதம் வரை உயர்த்தப்பட்டுள்ளதாகவும் தொழில் வல்லுநர்கள், வர்த்தகர்களாக கருதப்பட்டு அம்மட்டத்தில் வரி அறவிடப்படுவதாகவும் வைத்தியர் அனுருத்த பாதெனிய சுட்டிக்காட்டினார்.

குறித்த பிரச்னையை தீர்ப்பது தொடர்பில் நடவடிக்கை முன்னெடுப்பதற்கு அதனுடன் தொடர்புடைய தரப்பினருடன் கலந்துரையாடலொன்றை தயார்ப்படுத்துமாறு பிரதமர் இதன்போது சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

அரச சேவையாளர்களின் சம்பளம் தொடர்பில் காணப்படும் பிரச்னையை தீர்ப்பதில் அது குறித்து நிதி அமைச்சு, அரசாங்க நிர்வாக அமைச்சுடன் இணைந்து தேசிய சம்பளக் கொள்கையின் அடிப்படையில் சம்பள ஆணைக் குழுவின் பரிந்துரைகளுக்கமைய சம்பளம் தொடர்பான பிரச்னைகளை தீர்க்குமாறு அரச வைத்திய அதிகாரிகளின் சங்கத்தின் மருத்துவர்கள் இதன் போது பிரதமரிடம் வேண்டுகோள் விடுத்தனர்.

குறித்த சந்திப்பில் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல, இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தை, பிரதமரின் சிரேஷ்ட உதவி செயலாளர் பிரியங்க நாணயக்கார, தேசிய சம்பள ஆணைக்குழுவின் செயலாளர் சந்திரானி சேனாரத்ன, அரசாங்க சேவைகள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் பணிப்பாளர் தரங்கா ஹேரத், தேசிய வரவு - செலவுத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஜூட் நிலுக்ஷான், சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் மருத்துவர் சுனில் டி அல்விஸ், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் சம்பத் அமரதுங்க, அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் விசேட நிபுணர் வைத்தியர் அனுருத்த பாதெனிய மற்றும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் மருத்துவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# கண்ணாடி வீட்டிலிருந்து யாரும் கல்லெறியாதீர்கள்

## மைத்திரிபால சீற்றம்



கொழும்பு, நவ 26

**2015ஆம் ஆண்டின் முன்னர் ஜனாதிபதிகள் எப்படி செலவு செய்தார்கள் என்பதை சூசகமாக குறிப்பிட்டு, பெரமுனவினருக்கு பதிலடி கொடுத்தார் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.**

**பாராளுமன்றத்தில் விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்த கருத்துக்கு பதிலளிக்கும்போதே அவர் இந்த பதிலடிகளை வழங்கினார்.**

**அவர்களின் நிலைக்கு ஏற்றவாறு பேச வேண்டும் என்றும் அவர் கூறினார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

முன்னாள் ஜனாதிபதி என்ற முறையில் என்னை குறிவைத்தால் எதையும் கூறுவதற்கு சபாநாயகர் அவர்களே எனக்கும் உரிமை உண்டு. அடித்தால் நாங்கள் அடிப்போம். ஆனால், நாங்கள் நீங்கள் சொல்லும் வழியில் அல்ல, வேறு வழியில் அடிக்கிறோம்.

எனது வருடாந்த வரவு - செலவுத் திட்டத்தையும் தற்போதைய ஜனாதிபதியின் வரவு -செலவுத்திட்டத்தையும் எடுத்து நான் தேவையில்லாமல் செலவு செய்ததாக கூறுகிறார்கள்.

அவர்கள் கண்ணாடி வீடுகளில் அமர்ந்து கற்களை வீசுவது எனக்கும் பிடிக்கவில்லை.

அதற்குக் காரணம், முன்னாள் ஜனாதிபதிகள் எப்படிச் செலவு செய்தார்கள், எப்படிப் பயணம் செய்தார்கள், எப்படி வாகனங்களைப் பயன்படுத்தினார்கள், விமானங்கள் எவ்வாறு பயன்படுத்தப்பட்டன, ஹெலிகொப்டர்கள் எவ்வாறு பயன்படுத்தப்பட்டன,

நான் 2015 முதல் அவர்களுக்கு ஓர் உதாரணத்தை ஏற்படுத்தினேன்.

சண்டைக்குப் போனால் என்ன காயங்கள் ஏற்படும்.

இந்த மூன்றில் இரண்டு பெரும்பான்மை என்றால் என்ன, அரசாங்கம் என்றால் என்ன? என்பதை இன்னும் ஆழமாகவும், சிக்கலானதாகவும், புத்திசாலித்தனமாகவும் நாம் சிந்திக்க வேண்டும். நாம் இன்னும் பன்மைத்துவமாக சிந்திக்க வேண்டும். எனவே, அரசாங்கத்தின் மூன்றில் இரண்டு பங்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 14 எம்.பி.க்களின் கைகளில் உள்ளது. அந்தவகையில், கடந்த 50-60 வருடங்களில் அரசாங்கத்திற்குள்ளேயே சண்டையிட்டால் என்ன விளைவுகள் ஏற்படும் என்பதை முன்னைய அரசாங்கங்கள் நிரூபித்துள்ளன.

பொதுஜன பெரமுன மற்றும் 11 கூட்டணி கட்சிகள் இணைந்து அமைத்த ஆட்சி இது.

ஆளும் கட்சியில் பிரச்னைகளை உருவாக்காமல் இன்னும் கண்ணியமாக நடந்து கொள்ளுங்கள். அந்த நட்பை பேணுவோம். நாம் கீழே செல்ல வேண்டியதில்லை-என்றார்.

# சுமந்திரனும் சாணக்கியனும் இன்று பிரிட்டன் அமைச்சர்களுடன் பேச்சு

யாழ்ப்பாணம், நவ 26

தமிழ் தேசிய கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் மற்றும் மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் ஆகியோர் நேற்று லண்டன் பயணமாகினர்.

அமெரிக்காவில் அமெரிக்க அதிகாரிகளுடனான உயர்மட்ட சந்திப்புகளை தொடர்ந்து கனடா மற்றும் பிரிட்டன் நாடுகளின் அமைச்சர்களுடனான சந்திப்புகளும் இடம்பெறும் என ஏற்கனவே செய்திகள் தெரிவித்திருந்தன.

அதனடிப்படையில் கடந்த இரு நாள்களுக்கு முன்னர் கனடாவில் கனடிய அமைச்சர்களுடனான சந்திப்புகளை மேற்கொண்டனர்.

நேற்று லண்டன் பயணமான இருவரும், இன்று வெள்ளிக்கிழமை பிரிட்டன் அமைச்சர்களுடனான சந்திப்புகளை மேற்கொள்வார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

பிரிட்டன் சந்திப்புகள் முடிவடைந்த பின்னர், இருவரும் அடுத்த புதன்கிழமை நாடு திரும்புகின்றனர்.

# தமிழ்ச்சங்கம் நடத்தும் நாவலர் நினைவரங்கம்

யாழ்ப்பாணம், நவ. 26

யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம் முன்னெடுக்கும் நாவலர் நினைவரங்கம் நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.



தமிழ்ச்சங்கத் தலைவர் 'செந்தமிழ் சொல்லருவி' ச. லலீசன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் நிகழ்வுக்கு அனுசரணை வழங்கும் கரிகணன் நிறுவன பணிப்பாளர் சிவ. ராஜ்குமார் தம்பதியர் மங்கல விளக்கேற்றுவர்.

"செஞ்சொற்செல்வர்" கலாநிதி ஆறு. திருமுருகன் தொடக்கவுரையையும் யாழ். மாநகர ஆணையாளர் த. ஜெயசீலன் வாழ்த்துரையையும் வழங்குவர். தெல்லிப்பழை யூனியன் கல்லூரி உயர்தர வகுப்பு மாணவன் ச. அமல அசாம் நடையில் நின்றுயர் நாயகன் நாவலர் என்ற பொருளிலும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி உயர்தர வகுப்பு மாணவன் ஜெ. தவேதன் எழுந்த கொழுங்கனல் என்ற பொருளிலும் உரையாற்றுவர்.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி தமிழாசிரியரும் இந்து ஆன்மீகப் பிரசாரகருமான க. கனகதுர்க்கா நாவலர் வழி என்ற பொருளில் நினைவுப் பேருரையாற்றுவார். தமிழ்ச்சங்கச் செயலாளர் இ. சர்வேஸ்வரா நிறைவுரையையும் நன்றியுரையையும் வழங்குவார். சுகாதார நடைமுறைகளை பின்பற்றி நிகழ்வில் பங்கேற்குமாறு தமிழ்ச் சங்கத்தினர் வேண்டியுள்ளனர்.

(ஐ)

# பருத்தித்தித்துறை தவிசாளர் உட்பட 17 பேர் தனிமைப்படுத்தப்பட்டனர்!

வடமராட்சி, நவ. 26

பருத்தித்துறை நகர சபையின் உறுப்பினர் ஒருவருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டதை அடுத்து தவிசாளர், உறுப்பினர்கள் மற்றும் இரு உத்தியோகத்தர்கள் என 17 பேர் தனிமைப்படுத்தப்பட்டனர்.

இது தொடர்பில் மேலும் அறிய வருவதாவது, நேற்று முன்தினம் பருத்தித்துறை நகர சபையின் 2022 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவு திட்ட வாக்கெடுப்பு இடம்பெற்றது. இதில், பங்கேற்ற அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் உறுப்பினர் ஒருவருக்கு கொரோனா தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டது.

இதையடுத்து அந்த அமர்வில் கலந்து கொண்ட 14 உறுப்பினர்களுடன் ஒரு தொழில்நுட்ப உத்தியோகத்தர், எழுதுநர் நேற்று முன்தினம் முதல் தனிமைப்படுத்தப்பட்டனர். பருத்தித்துறை சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையினர் இதற்கான நடவடிக்கைகளை எடுத்திருந்தனர்.

(ஐ-2)

# தீவிரவாதத்தை இல்லாதொழிக்க இலங்கையுடன் ரஷ்யா இணையும்!

கொழும்பு, நவ. 26

மீள் தடுப்பூசியேற்றல் செயல்திட்டத்தின் ஓரங்கமாக 60 இலட்சம் 'ஸ்புட்னிக்' கோவிட் - 19 தடுப்பூசிகளை இலங்கைக்கு வழங்குவதற்குத் தயாராக இருப்பதாக ரஷ்யா தெரிவித்துள்ளது. அத்துடன், தீவிரவாத செயல்பாடுகளுடன் தொடர்புபட்ட நபர்கள் மற்றும் அமைப்புக்கள் தொடர்பான தகவல்களைப் பரஸ்பரம் பகிர்தல் உள்ளடங்கலாக தீவிரவாதத்தை இல்லாதொழிப்பதில் இலங்கையுடன் இணைந்து பணியாற்றுவதற் கும் இணக்கம் வெளியிட்டுள் ளது.

ரஷ்யாவிற்கும் இலங்கைக்கும் இடையில் பாதுகாப்புத் துறைசார் கலந்துரையாடல்களை முன்னெடுக்கும் நோக்கில் கடந்த திங்கட்கிழமை கொழும்பை வந்தடைந்த ரஷ்ய பாதுகாப்புப் பேரவை செயலாளர் நிக்கோலாய் பட்ரூஷேவ் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பாதுகாப்புச்செயலாளர் ஜெனரல் கமால் குணரத்ன ஆகியோருடன் சந்திப்புக்களை நடத்தினார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடனான சந்திப்பின் போது அரசியல், பொருளாதாரம், வர்த்தகம், சக்திவலு மற்றும் பாதுகாப்பு உள்ளிட்ட துறைகளில் இரு நாடுகளுக்கும் இடையிலான நல்லுறவை மேலும், விரிவுபடுத்திக்கொள்வது குறித்து கலந்துரையாடப்பட்டதாக இலங்கையிலுள்ள ரஷ்யத்தூதரகம் தெரிவித்துள்ளது.

இதன்போது தெற்காசியப் பிராந்தியத்தில் ரஷ்யாவின் நீண்டகால நட்புறவு நாடாக இலங்கை விளங்குவதாக சுட்டிக்காட்டிய நிக்கோலாய் பட்ரூஷேவ், இந்த நல்லுறவு பரஸ்பர நம்பிக்கை, கௌரவம் மற்றும் சமத்துவம் ஆகியவற்றின் அடிப்படையில் பாரம்பரியமாகக் கட்டியெழுப்பப்பட்ட ஒன்றாகும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அதுமாத்திரமன்றி மனிதாபிமான ரீதியான உதவி அடிப்படையில் ரஷ்ய அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட 'ஸ்புட்னிக்' கோவிட் - 19 தடுப்பூசிகள் தொடர்பில் நினைவுறுத்திய ரஷ்ய பாதுகாப்புப் பேரவை செயலாளர், மீள் தடுப்பூசியேற்றல் செயல் திட்டத்தின் ஓரங்கமாக மேலும் 60 இலட்சம் தடுப்பூசிகளை வரும் நாட்களில் இலங்கைக்கு வழங்க எதிர்பார்த்திருப்பதாகவும் தெரிவித்தார்.

(ஐ)

# படகுப் பாதை விபத்து; நகரசபை தவிசாளர் கைது

திருமலை, நவ 26

கிண்ணியாவில் படகுப் பாதை விபத்தில் 6 பேர் உயிரிழந்ததுடன் 20 பேர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட சம்பவம் தொடர்பில் கிண்ணியா நகரசபைத் தலைவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

திருகோணமலை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்படுவதற்காக அவர் அழைத்துச் செல்லப்பட்டார் என பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய படகு உரிமை யாளர் உள்ளிட்ட மூவர் நேற்றுக் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நிலையில் நகர சபைத் தலைவர் நேற்று கைது செய்யப்பட்டார்.



கிண்ணியா குறிஞ்சாக்கேணி பாலத்தை ஒன்பது மாதங்களுக்குள் நிர்மாணிக்கு மாறு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று முற்பகல் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளர் ஆர். டபிள்யூ.டபிள்யூ. ஆர். பிரேமசிறி இதனைத் தெரிவித்தார்.

(அ)



புலம்பெயர் தமிழர் மேற்கு நாடுகளுக்குக் கொடுக்கும் அழுத்தங்கள் இஸ்ரேல் கிடைப்பதற்கு முன்னர் யூதர்கள் கொடுத்த அழுத் தங்களைப்போன்று வளர்ந்து வருகின்றது. ஆனால், இலங்கையில் வாழும் தமிழர்களே பேரினவாதிகளுடன் சமர சம் பேசி தமது பிரச்னை களைத் தீர்க்க முடியுமென் றால் புலம்பெயர் தமிழரை புறக்கணிக்கலாம்...

கலாநிதி அமீரலி

# தமிழ் தலைவர்களின் அமெரிக்க யாத்திரை

பாராளுமன்றப் பிரதிநிதிகள் சுமந்திரன், சாணகியன் சகிதம் தமிழ் தலைவர்களின் குழு வொன்று அமெரிக்காவின் அழைப்பை ஏற்று, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் ஆசீர்வாதத்துடன் அண்மையில் விமான யாத்திரையொன்றை மேற்கொண்டு கனடாவில் மூக்குடைபட்டதை வாசகர் கள் அறிந்திருப்பர். இந்த யாத்திரையின் நோக்கமென்ன அதன் பலாபலன்களென்ன என்பனவெல்லாம் ஒரு மூடுமந்திர மாகவே இதுவரை இருக்கின்றன. ஆனாலும் அண்மையில் இலங்கை அர சின் சில இராஜதந்திரக் காய் நகர்வுகளை அவதானிக்கையில் இந்த யாத்திரை ராஜ பக்ஷ அரசுக்குச் சாதகமான ஓர் அமெ ரிக்க உறவை வலுப்படுத்த எவ்வாறு தமிழ் தலைவர்கள் உதவலாம் என்ற ஒரு நோக்கத்தை அடிப்படையாகக் கொண்ட தென ஊகிக்கத் தோன்றுகிறது.

கடந்த வருடம் ஐக்கிய நாடுகள் சபை யின் மனித உரிமைச் சபை இலங்கை அரசுக்கு எதிராக நிறைவேற்றிய பிரேரணையும், அதனைத் தொடர்ந்து ஐரோப்பிய ஒன்றியம் விடுத்த இறக்கு மதிச் சலுகை சம்பந்தமான பயமுறுத்த லும், உலக முஸ்லிம் கூட்டுறவுத்தாபனம் நிறைவேற்றிய இலங்கை முஸ்லிம்கள் சார்பான ஒரு கண்டனப் பிரேரணையும், இலங்கையின் வடக்கும் கிழக்கும் தமிழர் களின் தாயகமென்ற தோரணையில் அமெரிக்க காங்கிரசில் எடுக்கப்பட்ட சில நடவடிக்கைகளும் புலம்பெயர் தமி ழர்களினதும் புலம்பெயர் முஸ்லிம் களினதும் அயரா முயற்சியால் உலக அரங்கில் ஏற்பட்ட அழுத்தங்கள் என் பதை மறுக்க முடியாது.

ராஜபக்ஷ அரசோ பல கோணங்க ளிலிருந்தும் நெருக்கடிகளை எதிர்நோக் கிய வண்ணம் எப்படி அவற்றைச் சமா ளிப்பதென்று அங்கலாய்க்கிறது. வங்கு றோத்தின் விளிம்பில் பொருளாதாரம், சீன உறவால் ஏற்பட்டுள்ள சர்வதேச நெருக்கடி, சிங்கள - பௌத்த பேரின வாதத்தால் எழுந்துள்ள இனமத முறு கல்கள், கொள்ளை நோயினால் விளைந்த சீரழிவுகள், ஜனாதிபதியின் தன்னிச்சை யான செயல்பாடுகளால் மக்களிடையே ஏற்பட்டுள்ள அதிருப்திகளும் வேக்காடு களும் என்றவாறு பிரச்னைகளின் பட்டி யல் நீண்டுகொண்டே போகின்றது. இந்தச் சிக்கலான ஒரு சூழலில் அமெ ரிக்காவின் நட்பினைச் சம்பாதிக்கா விட்டால் அதன் விளைவுகள் பாரதூர மனவையாக முடியும் என்று கருதியே சில காய் நகர்வுகள் இடம்பெற்றுள்ளன.

முதலில் அமெரிக்காவின் நட்பு நாடான இந்தியாவுடன் சிநேகம் வலு வடையத் தொடங்கியுள்து. கொழும்புத் துறைமுகக் கிழக்குக் கொள்கலன் சீர மைப்பையும் பராமரிப்பையும் சீனா வுக்கு வழங்கி இந்தியாவுக்கு ஏமாற் றத்தை ஏற்படுத்தியதன் தவறை உணர்ந்து மேற்குக் கொள்கலனை இந்தி யாவின் அதானி நிறுவனத்துக்கு வழங் கிச் சமாளித்துக் கொண்டது. இந்தியப் பிரதமர் மோடியைப் பொறுத்தவரை இலங்கைத் தமிழரின் பிரச்னையோ அதைப்பற்றி தமிழ்நாடு செலுத்தும் அழுத்தங்களோ ஒரு பொருட்டல்ல. இலங்கைக்குள் இந்திய முதலீடுகள் நுழைந்து இலங்கையின் பொருளா தாரத்தில் ஒரு கணிசமான இடத்தைப் பிடிக்கமுடியுமாயின் அதுவே இந்திய முதலாளித்துவத்துக்கு மோடி ஆற்றும் மகாசேவையாகும்.

இலங்கையிலிருந்து உத்தர பிரதேசம் நோக்கிச் செல்லும் பௌத்த யாத்திரிகர் களுக்காக குஷிநகர் விமான நிலையத் தில் வழங்கப்பட்ட அபார வரவேற்புகள் எல்லாமே பொருளாதார நோக்கை அடிப்படையாகக் கொண்டவையே. நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தனது கன்னி பட்ஜெட்டை சமர்ப்பித்தபின் இந்தியாவுக்குப் பயணமாவதும் அந்த உறவை வலுப்படுத்தவே.


இந்திய உறவு வலுவடைந்தால் அது அமெரிக்க உறவு வலுவடையவும் சாதக மாய் அமையுமல்லவா? இந்தியாவுக்கு கிழக்குக் கொள்கலன் விடயத்தில் இழைக்கப்பட்ட ஏமாற்றத்தைப்போன்று அமெரிக்கா வுக்கும் அதன் மிலேனியம் சலஞ் தாபனத்தை நிராகரித்ததால் ராஜ பக்ஷ அரசு ஏமாற்றத்தை வழங்கியது. அதற்கு ஈடு செய்யும் முகமாகவே இப்போது கொழும்பிலுள்ள யுகதனாவி எரிசக்தி நிலையத்தை இரவோடிரவாக இரகசிய மாக அமெரிக்க வெஸ்ற் கோஸ்ற் பவர் நிறுவனத்துக்கு அரசு வழங்கியுள் ளது. இது அமெரிக்க முதலாளித்துவத் துக்கு ராஜபக்ஷக்களின் நன்கொடை. இவ் வாறு இந்தியாவுடனும் அமெரிக்கா வுடனும் நெருக்கம் அதிகரிக்குமானால் ஐரோப்பிய ஒன்றியமும் இலங்கைக் கெதிரான அதன் கெடுபிடியை தளர்த் தும் அல்லவா? பணம் பாதாளம் மட்டும் பாயுமென்று சும்மாவா சொன்னார்கள்?

இந்தக் காய் நகர்வுகளுக்குப் பலியா கப்போவது சிறுபான்மையோரின் பிரச் னைகளே. இவற்றுள் முஸ்லிம் களைப் பற்றி ராஜபக்ஷ அரசு கவலை கொள்ளப் போவதில்லை. வெளிப்படை யாகச் சொன்னால் 1983 போன்ற ஒரு தாண்ட வம் முஸ்லிம்களையும் காத்திருக்கின்றது. அரசின் மக்களாதரவு கட்டுக்கடங்காமல் சரியும்போது அந்தத் தாண்டவம் அரங் கேறும். அது நடை பெற்றால் பிரதமர் மோடியோ ஆனந் தப்படுவாரேயன்றி ஏன் என்றும் கேட்க மாட்டார். அவ ரைப்பொறுத்தவரை உயிரற்ற ஒரு முஸ்லிமே நல்ல முஸ்லிம். உலக முஸ் லிம் கூட்டுறவுத் தாபனம் முஸ்லிம் நிலைக் காக இரங்கி ஓர் அறிக்கையை வெளியிட்ட துடன் அமைதி கண்டுவிடும். அமெரிக்காவும் ஐ. நாவில் சிறிது கூச்சலிட்டுவிட்டு மௌனமாகி விடும். ஆனால் தமிழரின் பிரச்னைகளை தமிழ் தலைவர்களைக் கொண்டே மறக் கச் செய்யவேண்டும். அது எப்படி?

புலம்பெயர் தமிழர் மேற்கு நாடு களுக்குக் கொடுக்கும் அழுத்தங்கள் இஸ்ரேல் கிடைப்பதற்கு முன்னர் யூதர்கள் கொடுத்த அழுத்தங்களைப் போன்று வளர்ந்து வருகின்றது. ஆனால் இலங்கையில் வாழும் தமிழர்களே பேரினவாதிகளுடன் சமரசம் பேசி தமது பிரச்னைகளைத் தீர்க்க முடியுமென்றால் புலம்பெயர் தமிழரை புறக்கணிக்கலாம். இது எவ்வாறு செயற்படமுடியும் என் பதை உணர்த்தவே மிதவாதிகளான தமி ழர் கூட்டணித் தலைவர்களை அமெ ரிக்கா ராஜபக்ஷக்களின் ஆலோசனை யுடன் அழைத்துள்ளது எனக் கருதலாம். 13ஆம் திருத்தத்தை அமுல்படுத்த சிங்கள பௌத்த பேரினவாதிகள் என்றுமே இணங்கமாட்டார்கள். ஆகவே அவர்க ளுடைய ஆதரவில் ஆட்சிக்குவந்த ராஜபக்ச அரசு அந்தத் திருத்தத்தை தமி ழர்கள் கைவிடவேண்டுமென விரும்பு கிறது. அதைத்தான் இந்தியாவும் விரும்பு கிறது. அதற்கு மாற்றாக வேறு சலுகை களை வழங்க அரசு விரும்பலாம். அவற் றையெல்லாம் அமெரிக்கத் தலைவர்களு டன் கலந்துரையாடுவதே இந்த யாத்திரை யின் அந்தரங்கமாகவும் இருக்கலாம்.

இதற்கிடையே சிறுபான்மையினரின் பிரச்னைகளுக்கு மனித உரிமை அடிப் படையில் தீர்வு காணப்பட வேண்டு மென பெரும்பான்மை இனத்துக்குள் ளேயே பல சிவில் இயக்கங்கள் வெளிப் படையாகக் குரலெழுப்புகின்றன. அவ் வியக்கங்கள் இந்த அரசை மாற்றி ஒரு மாற்றுக் கூட்டணியை ஆட்சியில் அமர்த்தினால் அது சாத்தியப்படுமென நம்புகின்றன. அப்படியான ஒரு கூட் டணி இன்றைய எதிர்க்கட்சிகளுள் இருந்தே உதயமாகவேண்டும். அதற்குத் தலைவர் யாரென்பது பிரச்சினையல்ல. அக்கூட்டணியின் செயற்திட்டங்களே முக்கியம். அந்த முயற்சியில் தமிழ் தலை மைத்துவம் பாராமுகமாகமாக இருப்பது ஆச்சரியமாக இருக்கிறது. தமிழர்களே பல கூறுகளாகப்பிரிந்து தலைமைக்குப் போட்டிபோடுகையில் மற்றவர்களுடன் கைகோர்த்துப் போராடுவது எப்படி? தமக்குள்ளே பேசும்போது தமிழரென் றும் மற்றவருடன் பேசும்போது தமிழ் பேசும் இனமென்றும் அடையாளப்படுத் தும் சந்தர்ப்பவாதிகளுக்கு இன ஒற்று மையுடன் போராடும் வல்லமை ஏற்படுமா? ■





# ரஷ்ய ஜனாதிபதி புடினின் விஜயம்
# இந்தியா அமைக்கும் சக்கர வியூகம்

ந.பொன்குமரகுருபரன்

**“கொரோனா பரவலைத் தொடர்ந்து, ஒரு வருடமாக ரஷ்யாவைவிட்டு வெளியே வராத புட்டின், கடந்த ஜீன் மாதம்தான் அமெரிக்க ஜனாதிபதியைச் சந்திப்பதற்காக ஜெனிவாவுக்குச் சென்றார். அதற்குப் பிறகு இந்தியாவுக்குத்தான் அவர் பயணமாகவிருக்கிறார்.**

சீனாவுடனான எல்லைப் பிரச்னை இந்தியாவுக்குக் குடைச்சலைக் கொடுத்துவரும் நிலையில், வரும் டிசெம்பர் 6ஆம் திகதி இந்தியாவுக்கு விஜயம் செய்யவிருக்கிறார் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் சீனாவுக்கு எதிராக இந்தியா அமைக்கும் சக்கர வியூகத்தின் ஒரு பகுதியாக இந்த விஜயம் முக்கியத்துவம் பெற்றிருக்கிறது. ரஷ்ய ஜனாதிபதியின் இந்தப் பயணத்தில், அந்நாட்டுடன் இரண்டு முக்கியமான உடன்படிக்கையை புதுடில்லி செயல்படுத்தவிருக்கிறது என்கிறார்கள் விவரமறிந்த வெளியுறவுத்துறை அதிகாரிகள்!

போர்க் கப்பல்களுக்கு எரிபொருள் நிரப்பவும், உணவுப்பொருள்கள், உதிரி பாகங்களைப் பெறுவதற்கும் ஒரு நாட்டின் இராணுவத் துறைமுகங்களை மற்றொரு நாடு பயன்படுத்திக்கொள்ள ஒப்பந்தங்கள் அவசியம். இப்படியான ஒப்பந்தங்களைப் பல ஆண்டுகளாக இந்தியா மேற்கொள்ளாத நிலையில், முதன்முறையாக 2016 ஆம் ஆண்டு அமெரிக்காவுடன் ‘லொஜிஸ்டிக்ஸ் எக்ஸ்சேஞ்ச் மெமோரண்டம் ஒஃப் அக்ரிமென்ட்’ (LEMOA) என்றொரு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது. இதன் மூலமாக, இந்தியாவுக்குச் சொந்தமான இராணுவத் துறைமுகங்களை அமெரிக்காவும், அமெரிக்காவின் இராணுவத் துறைமுகங்களை இந்தியாவும் இராணுவ ரீதியாகப் பயன்படுத்திக்கொள்ள வழிவகை உருவானது. இந்த முறையில் ‘அவுஸ்திரேலியா, ஜப்பான், பிரான்ஸ், சிங்கப்பூர், தென்கொரியா நாடுகளுடன் அடுத்தடுத்து ஒப்பந்தங்களைக் கையெழுத்திட்ட இந்தியா, சீனாவைச் சுற்றிலும் கடல் பரப்பில் சக்கர வியூகம் அமைக்கிறது’ என்கிறார்கள் விவரமறிந்தவர்கள்.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட இந்திய வெளியுறவுத்துறை அதிகாரிகள் சிலர், “சீனாவின் கடல் பரப்பைச் சுற்றிலும், பிலிப்பைன்ஸ், தென்கொரியா, சிங்கப்பூர், ஜப்பான் நாடுகளில் அமெரிக்காவுக்குக் கடற்படைத் தளங்கள் உள்ளன. 2016ஆம் ஆண்டு அமெரிக்காவுடன் இந்தியா மேற்கொண்ட ஒப்பந்தத்தின் பயனாக, இந்தத் தளங்களை இந்தியப் போர்க்கப்பல்கள் பயன்படுத்திக்கொள்ள முடியும். போர்க்கப்பலில் பயணிக்கும் வீரர்களுக்குத் தேவையான உணவுப் பொருள்கள், கப்பலின் உதிரி பாகங்களை இதன் மூலமாகப் பெற்றுக்கொள்ளலாம். ஆனால், நிரந்தரமாக அந்தத் துறைமுகத்தில் நம் போர்க்கப்பல்களை நிறுத்திவைக்க முடியாது. இதன் பயன்பாடு மிக முக்கியத்துவமானது என்பதை அறிந்துதான், சீனாவைச் சுற்றியுள்ள நாடுகளுடன் இப்படியான ஒப்பந்தங்களை இந்தியா மேற்கொள்கிறது.

2017ஆம் ஆண்டு, கிழக்கு ஆப்பிரிக்க நாடான ஜிபூட்டியில் சீனாவின் முதல் வெளிநாட்டு கடற்படைத் தளம் அமைக்கப்பட்டது. இதற்கு பதிலடியாக, மார்ச் 2018இல் பிரான்ஸ் நாட்டுடன் ‘லொஜிஸ்டிக்ஸ் சப்போர்ட் அக்ரிமென்ட்’ கையெழுத்திடப்பட்டு, இந்தியப் பெருங்கடல் பகுதியிலுள்ள அந்த நாட்டின் ரீயூனியன் தீவுக் கடற்படைத்தளத்தை இந்தியா பயன்படுத்திக்கொள்ள ஆரம்பித்தது. தற்போது, ரஷ்ய ஜனாதிபதி புடின் வருகையையொட்டி இப்படியான ஓர் ஒப்பந்தத்தை ரஷ்யாவுடன் இந்தியா கையெழுத்திடவிருக்கிறது. ‘ரெசிபுரோக்கல் எக்ஸ்சேஞ்ச் ஆஃப் லாஜிஸ்டிக்ஸ் அக்ரிமென்ட்’ (RELOS) என்று பெயரிடப்பட்டிருக்கும் இந்த ஒப்பந்தத்தின் மூலமாக, ரஷ்யாவின் இராணுவத் துறைமுகங்களை இந்தியப் போர்க்கப்பல்கள் பயன்படுத்திக்கொள்ள முடியும்.

வடக்கில் ஆர்க்டிக் கடலில் ஆரம்பித்து, ஜப்பானியக் கடல், மஞ்சள் கடல், கிழக்கு மற்றும் தெற்கு சீனக் கடல் வரை பல்வேறு நாடுகளுடனான லாஜிஸ்டிக்ஸ் ஒப்பந்தங்கள் மூலமாக இந்தியப் போர்க் கப்பல்களுக்கு அனுமதி கிடைக்கும். சீனாவுடன் போர் மூளும்பட்சத்தில், அப்போது இது பெரிதும் கைகொடுக்கும்.

தவிர, ரஷ்யாவிடம் ஏற்கெனவே போட்டுக்கொண்ட ஒப்பந்தப்படி, எஸ்-400 ரக ஏவுகணைகள் விரைவில் இந்தியாவுக்கு வரவிருக்கின்றன. 40,000 கோடி ரூபாய்க்கு, இந்த வகை ஏவுகணைகள் ஐந்துக்கு ஒக்ரோபர் 2018இல் இந்தியா ஆர்டர் கொடுத்திருந்தது. பாகிஸ்தானின் எந்தப் பகுதியிலிருந்து போர் விமானங்கள் கிளம்பினாலும், திபெத்திய பகுதியில் சீன இராணுவ விமானங்கள் பறந்தாலும், எஸ்-400 ரேடார் மூலமாகக் கண்காணிக்கலாம். நீண்ட தூரம் பாயும் ரஷ்ய ஏவுகணைகளும் இந்த ஒப்பந்தத்துக்குள் அடக்கம்.

**“அவுஸ்திரேலியா, ஜப்பான், பிரான்ஸ், சிங்கப்பூர், தென்கொரியா நாடுகளுடன் அடுத்தடுத்து ஒப்பந்தங்களைக் கையெழுத்திட்ட இந்தியா, சீனாவைச் சுற்றிலும் கடல் பரப்பில் சக்கர வியூகம் அமைக்கிறது’ என்கிறார்கள் விவரமறிந்தவர்கள்.**

ஆனால், ரஷ்யாவிடமிருந்து போர்த் தளவாடங்களை எந்த நாடு பெற்றாலும், அந்த நாட்டின் மீது பொருளாதாரத் தடைகளை விதித்துவருகிறது அமெரிக்கா. இதற்காக, ‘காட்ஸா’ என்கிற பெயரில் தனிச் சட்டத்தையும் அவர்கள் உருவாக்கியிருக்கின்றனர். ஏற்கெனவே எஸ்-400 ரக ஏவுகணை களை ரஷ்யாவிடமிருந்து வாங்கிய சீனா, துருக்கி நாடுகள் இந்தத் தடையைச் சந்தித் துள்ளன. இந்தியா மீது அப்படியான தொரு தடையை அமெரிக்கா தொடுத் தால், அது அந்த நாட்டுக்குத்தான் இழப்பாகிவிடும்.


‘குவாட்’ நாடுகள் கூட்டமைப்பின் ஓர் அங்கமாகவும், தெற்காசியாவில் அமெரிக்காவின் நம்பிக்கைக்குரிய நண்பனாகவும் இந்தியா இருக்கிறது. அமெரிக்க நிறுவனங்களுக்கு மிகப்பெரிய சந்தையாகவும் இருக்கிறது. இந்தச் சூழலில், ‘நாம் எங்கேயிருந்து ஆயுதங்களை வாங்க வேண்டும்’ என்று அமெரிக்கா தீர்மானிக்க முடியாது. இதை, நவம்பர் 15ஆம் திகதி தன்னைச் சந்தித்த அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்களிடம் நேரடியாகவே சொல்லிவிட்டார் இந்தியப் பிரதமர் மோடி. ‘காட்ஸா’ சட்டம் அமலுக்கு வருவதற்கு முன்பிருந்தே, ரஷ்யாவுடன் இந்தியா இராணுவ ரீதியிலான வர்த்தகத்தைக் கொண்டிருப்பதாக வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் மூலம் வாஷிங்டனுக்கும் தெளிவான விளக்கம் அளிக்கப்பட்டிருக்கிறது. இதையும் மீறி அமெரிக்கா நெருக்குதல் கொடுப்பதற்கு வாய்ப்பு இல்லை” என்றார்கள் அந்த அதிகாரிகள்.

கொரோனா பரவலைத் தொடர்ந்து, ஒரு வருடமாக ரஷ்யாவைவிட்டு வெளியே வராத புட்டின், கடந்த ஜூன் மாதம்தான் அமெரிக்க ஜனாதிபதியைச் சந்திப்பதற்காக ஜெனிவாவுக்குச் சென்றார். அதற்குப் பிறகு இந்தியாவுக்குத்தான் அவர் பயணமாகவிருக்கிறார். ரஷ்ய ஜனாதிபதியின் இந்தப் பயணம் மூலமாக சீனாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இந்தியா மறைமுக செக் வைப்பதோடு, ‘எங்கள் வியாபாரத்தில் தலையிடாதே’ என அமெரிக்காவுக்கும் ‘முற்றுப்புள்ளி’ வைப்பதுதான் சர்வதேச அரசியலை தகிக்கவைத்திருக்கிறது. புடினின் விஜயம் சீனாவைச் சுற்றி இந்தியா கட்டமைக்கும் சக்கர வியூகத்துக்கு வலுசேர்க்கும் என்பதில் மாற்றமில்லை! ■

# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை
வி னாத்தாள் - I
நேரம் : 1 மணித்தியாலம்

07) 

அருகில் உள்ள கடிகார முகத்தில் உள்ள A, B ஆகிய முட்கள் 15 நிமிடங்களுக்கு முன்பு அமைந்திருந்த இலக்கங்கள் முறையே?

1) 8, 12 2) 12, 7 3) 7, 12

❖ **8, 9 ஆகிய வினாக்களில் எண்கோலத்தினை அவதானித்து வெற்றிடத்திற்குப் பொருத்தமான எண்ணைத் தெரிவு செய்க.**


08)

| | |
|---|---|
| 12 | 18 |
| 9 | 6 |

| | |
|---|---|
| 10 | 14 |
| 7 | 5 |

| | |
|---|---|
| ........ | 4 |
| 2 | 8 |

1) 2 2) 16 3) 14


09) 


1) 2 2) 3 3) 4

10) புதிய வகை யோக்கட் ஒன்றை விற்பனை செய்யும் நிறுவனம் ஒன்றில் 2 வெற்று யோக்கட் கோப்பைகளைச் சேகரித்து வழங்கும் ஒருவருக்கு ஒரு யோக்கட்டை இலவசமாக வழங்குகிறது. 12 யோக்கட்டை வாங்கும் ஒருவர் அதன் வெற்றுக் கோப்பைகளைக் கொடுத்து இலவசமாகப் பெற்றுக் கொள்ளக் கூடிய யோக்கட்களின் அதிகூடிய எண்ணிக்கை யாது?

1) 06 2) 11 3) 10

11) முகம் பார்க்கும் கண்ணாடியில் பார்க்கும்போது மாற்றமின்றித் தெரியும் உருத்தொகுதியைத் தெரிவு செய்க?




12) எண்பத்தாறாயிரத்து நானூற்று இருபது எனும் எண்ணை இலக்கத்தில் எழுதும் போது இனங்காணக்கூடிய இலக்கங்கள்.

1) இரட்டை எண்களாகும்.
2) ஒற்றை எண்களாகும்.
3) இரட்டை எண்களும் ஒற்றை எண்களும் ஆகும்.

❖ **13, 14 ஆகிய வினாக்களுக்கு தரப்பட்ட பாடலை வாசித்து பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**


**சுற்றுச்சூழல் எப்பொழுதும்**
**தூய்மையாக ஆனால் தான்**
**குற்றம் குறைகள் இல்லாமல்**
**கூடி வாழ வழி செய்யும்!**

13) பாடலில் கூறப்படும் பிரதான கருத்து யாது?

1) கூடி வாழ்வது தொடர்பாக.
2) குற்றம் குறைகள் இல்லாமல் இருப்பது தொடர்பாக.
3) சுற்றுச்சூழலைத் தூய்மையாக்குவது தொடர்பாக.


14) தூய்மை என்ற கருத்தைத் தரும் சொல்.

1) சுத்தம் 2) அசுத்தம் 3) அழகு

15) 

இப்பெரிய உருளையைப் புள்ளிக்கோட்டின் வழியே துண்டுகளாக வெட்டும்போது கிடைக்கும் புதிய வட்டவடிவமான முகங்கள் எத்தனை?

1) 8 2) 6 3) 3

16) 

இவ்வுருவிலுள்ள செங்கோணம் தொடர்பான கூற்றுக்களில் சரியானது எது?

1) உருவின் உள்ளேயும் உருவின் வெளியேயும் உள்ள செங்கோணங்களின் எண்ணிக்கை சமனாகும்.
2) உருவிற்கு வெளியே 8 செங்கோணங்கள் உள்ளன.
3) உருவின் உள்ளே 16 செங்கோணங்கள் உள்ளன.

❖ **கீழே தரப்பட்ட சம்பவத்திலுள்ள A, B ஆகிய இடைவெளிக்குப் பொருத்தமான சொல்லை முறையே தெரிவு செய்க.**

17) செல்லிடப்பேசியில் பேசிக்கொண்டு ............(A) ஓட்டுவதால் ஓட்டுநருக்கும் அதில் பயணிப்பவர்களுக்கும் ..............(B) அவ்வப்போது பாதிப்புக்கள் ஏற்படுவது வாடிக்கையாகிவிட்டது?

1) கப்பல், பாதசாரிகளுக்கும்
2) விமானம், பாதசாரிகளுக்கும்
3) வாகனம், பாதசாரிகளுக்கும்

# உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு நல்லாட்சி அரசுதான் பொறுப்பு!

## ஜனாதிபதி பகிரங்கமாகத் தெரிவிப்பு

கொழும்பு, நவ. 26

**"உயிர்த்த ஞாயிறுதினத் தாக்குதல்களுக்கு, முன்னாள் ஜனாதிபதி, பிரதமர், அமைச்சரவை உள்ளிட்ட அரசே பொறுப்புக்கூற வேண்டு மென்று, அந்தத் தாக்குதல்கள் தொடர்பில் விசா ரணை செய்வதற்காக கடந்த அரசு நியமித்திருந்த ஜனாதிபதி ஆணைக்குழு அறிவித்துள்ளது.**

அவ்வாணைக்குழுவின் பரிந்துரைகள், பாராளுமன்றத் தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அதேவேளை, தொடர் நட வடிக்கைகளுக்காக நீதியரசர் மற்றும் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் ஆகியவற்றிட மும் கையளிக்கப்பட்டுள்ளன. பாராளுமன்றச் சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்டுள்ள ஆணைக் குழு வெளிப்படுத்தியுள்ள குற்ற வாளிகளுக்கு எதிராகச் சட் டத்தை நிறைவேற்ற முடியும்."

- இவ்வாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரி வித்தார்.



உலகளாவிய உயர் தொழில் நுட்பத்துடன் தென்கிழக்கு ஆசியாவில் நிர்மாணிக்கப் பட்டுள்ள "தெற்காசியாவின் பிரவேசமான அதிவேக வான் நுழைவாயில்" என்று கருதப்படு கின்ற "கல்யாணி பொன் நுழை வாயில்" ஜனாதிபதி கோட்டா பய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ச ஆகியோர் தலைமையில் நேற்றுமுன்தினம் மாலை மக்கள் பாவனைக்காகத் திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வின்போது உரை யாற்றுகையிலேயே, ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கொரோனாத் தொற்றுப் பர வல் காலத்திலும்கூட, உட்கட் டமைப்பு வசதிகளின் அபிவிருத் திக்காக பல்வேறு திட்டங்கள் ஆரம்பிக்கப்பட் டுள்ளன. அவை யனைத்தையும் தொடர்ச்சியாக முன்னெடுப்பதாகச் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, எதிர்காலத்தில் நாட்டை மூட வேண்டி ஏற்படாதிருப் பின், உறுதியளிக்கப்பட்ட அனைத்துத் திட்டங்களையும் நிறைவு செய்ய முடியுமென்று மேலும் கூறினார். (இ)



# பெண்களுக்கு எதிரான வன்முறையை நிறுத்து!

## சபையில் எதிரணி வலியுறுத்து

கொழும்பு, நவ. 26

பெண்களுக்கு எதிரான வன்முறைகளைத் தடுப்பதற்கு கடும் நடவடிக்கைகள் எடுக் கப்பட வேண்டும் என பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி கோரிக்கை விடுத் துள்ளது.

இதனை வலியுறுத்தும் வகையில் "பெண்களுக்கு எதி ரான வன்முறையை நிறுத்து!" என்ற ஸ்ரிக்கரை சட்டைகளில் ஒட்டியபடி, கையில் பட்டி களை அணிந்து கொண்டு ஐக் கிய மக்கள் சக்தி உறுப்பினர் கள் சபை அமர்வில் நேற்று பங்கேற்றனர். பெண்களுக்கு எதிரான வன்முறைகளைத் தடுக் கக் கோரும் சர்வதேச தினம் நேற் றாகும். இந்நாளிலேயே இதனை இலங்கையின் எதிர்க்கட்சி வலியுறுத்தியுள்ளது.

அத்துடன், பெண் பாராளு மன்ற உறுப்பினர்களுக்கு எதி ரான வார்த்தைப் பிரயோக வன்முறைகளுக்கும் கண்டனம் தெரிவிக்கப்பட்டது. (இ)

# ஈஸ்டர் தாக்குதல் விவகாரம் தொடர்பில் மீண்டும் விவாதம் நடத்தப்பட வேண்டும்

## சபையில் ரஞ்சித் மத்தும பண்டார வலியுறுத்து

கொழும்பு, நவ. 26

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் மற்றும் அத னுடன் தொடர்புடைய விட யங்கள் தொடர்பில் பாராளு மன்றத்தில் மீண்டும் விவாதம் நடத்தப்பட வேண்டும்

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் மற்றும் அதனுடன் தொடர்புடைய விடயங்கள் தொடர்பில் பாராளுமன்றத்தில் மீண்டும் விவாதம் நடத்தப்பட வேண் டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார எம்.பி. கோரிக்கை விடுத்தார்.

இதற்காக இரு நாட்கள் ஒதுக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை அவர் நேற்று சபையில் விடுத்தார்.



இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சட்டம், ஒழுங்கு அமைச்ச ராக இருந்தபோது அரச உளவுப் பிரிவின் அறிக்கையொன்று கிடைத்தது. இது தொடர்பில் சி.ஐ.டி. மற்றும் ரி.ஐ.டி. பணிப் பாளர்களுடன் நான் கலந்துரை யாடினேன். இதன்பிரகாரம் சஹ்ரானை கைதுசெய்வதற் கான ஏற்பாடுகள் இடம்பெற் றன. நீதிமன்றத்தில் பிடியாணை பெறப்பட்டிருந்தது.

ஆனால், 52 நாட்கள் அர சியல் சூழ்ச்சியின்போது சட் டம், ஒழுங்கு அமைச்சுப் பதவி யில் இருந்து நான் மாற்றப்பட் டேன். திடீரென நாமல் குமார என ஒருவர் வந்தார். கொலை சூழ்ச்சி பற்றி கருத்து வெளியிட் டார். ரி.ஐ.டி. பணிப்பாளர் உள் ளிட்டவர்கள் கைது செய்யப்பட் டனர். நாமல் குமார விவகாரத் துக்கு என்ன நடந்தது? சஹ் ரான் தொடர்பில் விசாரணை களை முன்னெடுத்த அதிகாரி கள் கைதுசெய்யப்பட்டது ஏன்?

எனவே, இந்தச் சம்பவத்தின் பின்னணி என்னவென்பது மக்க ளுக்குத் தெரியும். அவர்கள் தான் இன்று எம் மீது கைநீட்டு கின்றனர்" - என்றார். (இ)

# விவாதம் நடத்த நாங்களும் தயார்

## எதிரணிக்கு அரசு பதிலடி

கொழும்பு, நவ. 26

"உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் மற்றும் அதனுடன் தொடர்புடைய விடயங்கள் தொடர்பில் பாராளுமன்றத்தில் விவாதம் நடத்துவதற்கு நாமும் தயார்."

- இவ்வாறு இராஜாங்க அமைச்சர் நிமல் லான்சா தெரிவித்தார்.



பாராளுமன்றத்தில் நேற்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார எம்.பியால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

"விவாதத்துக்கு நாமும் தயார். ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கைகள் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் எமக்கும் தகவல்களை வெளியிட வேண்டியுள்ளது" என்றும் நிமல் லான்சா மேலும் குறிப்பிட்டார். (இ)

# திருமணம் உள்ளிட்ட பல நிகழ்வுகளுக்கு அனுமதி

கொழும்பு, நவ. 26

நாட்டின் பொருளாதா ரத்தை முன்னோக்கிக் கொண்டு செல்லும் நோக்கில் நேற்று முதல் பல துறைகளில் வழ மையான சேவை நடவடிக்கை களை மேற்கொள்வதற்கு அனு மதி வழங்க எதிர்பார்த்துள்ள தாக என அரசு அறிவித்துள்ளது.

சுகாதார அமைச்சர் கெஹ லிய ரம்புக்வெல இதனைத் தெரிவித்தார்.

இதன்படி, திருமணங்கள், உணவகங்கள், பெரிய அள விலான ஹோட்டல்கள் மற்றும் சினிமாக்கள், நிகழ்வு முகாமைத் துவம் (இவன்ட் மனேஜ் மென்ட்) எனப்படும் குழுக்க ளுக்கும் இயங்க அனுமதிப்பதற்கு எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கடுமையான சுகாதார வழி காட்டுதல்களின் கீழ் திருமணங் கள், தியேட்டர்கள், உணவ கங்கள், ஹோட்டல்கள் மற்றும் நிகழ்வுகளை வழக்கம் போல் நடத்த அனுமதிக்க சுகாதார அமைச்சு முடிவு செய்துள்ளது எனவும் அவர் கூறினார்.

இந்த நிகழ்வுகள் முன்னர் வரையறுக்கப்பட்ட திறன்க ளின் கீழ் நடத்த அனுமதிக்கப் பட்டன. எவ்வாறாயினும், இது தொடர்பான இறுதித் தீர்மா னம் இன்று வெள்ளிக்கிழமை ஜனாதிபதி தலைமையில் கூடவுள்ள கொரோனா செயலணிக் கூட்டத்தில் எடுக்கப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

இதுபோன்ற நிகழ்வு களை வழக்கம் போல் நடத்த அனுமதிக்கும் முன், முழுத் தடுப்பூசி மற்றும் சுகாதார நடைமுறைகளை கண்டிப்பாக கடைபிடிக்க வேண்டியது அவசியம் எனவும் அவர் மேலும் கூறினார். (இ)



ஈழநாடு



## இங்கிலாந்துக்கு செல்ல முயன்ற

# புகலிடக் கோரிக்கையாளர்கள் பயணித்த படகு மூழ்கி 27 பேர் பலி!



லண்டன், நவ. 26

இங்கிலாந்து செல்ல முயன்ற புகலிடக் கோரிக்கையாளர்களின் படகு விபத்துக்கு உள்ளானதில் 27 பேர் உயிரிழந்தனர். முன்னதாக, இந்த விபத்தில் 31 பேர் உயிரிழந்தனர் என்று அறிவிக்கப்பட்டபோதும் அது நேற்றிரவு திருத்தப்பட்டது.

கடும் காற்று - சீரற்ற வானிலை காரணமாகவே இந்தப் படகு விபத்துக்கு உள்ளானதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.


இந்த விபத்து, பிரான்ஸின் நகரான கலேஸுக்கு அருகே ஆங்கிலக் கால்வாயில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம் பெற்றுள்ளது.

பிரான்ஸையும் ஐக்கிய இராச்சியத்தையும் பிரிக்கும் கடலில் குடியேறியவர்கள் சம்பந்தப்பட்ட அண்மைக் காலத்தில் பதிவான மோசமான சம்பவமாக இது கருதப்படுகிறது.

நீரில் மூழ்கி உயிரிழந்தவர்களில் ஐந்து பெண்களும் ஒரு சிறுமியும் அடங்குவர் என்று பிரான்ஸ் உள்துறை அமைச்சர் ஜெரால்ட் டார்மனின் தெரிவித்துள்ளார்.

உயிர் பிழைத்த இருவர் உயிருக்குப் போராடிக் கொண்டிருந்ததாகவும், மற்றொரு நபரை இன்னும் காணவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. அத்துடன், இறந்தவர்களை அடையாளம் காணும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த விபத்து தொடர்பில் புலம்பெயர்வோரை நாடு கடத்த முயன்ற 5 பேரை பிரான்ஸ் பொலிஸார் கைது செய்துள்ளனர். (ஐ)



## 12 சீன நிறுவனங்களுக்கு அமெரிக்கா வர்த்தக தடை!

வாஷிங்டன், நவ. 26

தேசிய பாதுகாப்பு மற்றும் வெளியுறவுக் கொள்கை கவலைகளை மேற்கோள் காட்டி, அமெரிக்க அரசாங்கம் தனது வர்த்தக தடுப்புப் பட்டியலில் 12 சீன நிறுவனங்களை சேர்த்துள்ளது.

சீன நிறுவனங்கள் உட்பட மொத்தம் 27 வெளிநாட்டு நிறுவனங்கள் இந்த பட்டியலில் புதன்கிழமை சேர்க்கப்பட்டுள்ளன.

தாய்வானின் நிலை மற்றும் பிற பிரச்னைகள் தொடர்பாக அமெரிக்காவுக்கும் சீனாவுக்கும் இடையே பதற்றங்கள் அதிகரித்து வரும் நிலையில் இந்த சமீபத்திய நடவடிக்கை வந்துள்ளது.

சீன இராணுவத்தின் குவாண்டம் கணனியியல் திட்டத்தை உருவாக்க சில நிறுவனங்கள் உதவுகின்றன என்று குற்றஞ்சாட்டி 12 சீன அடிப்படையிலான தொழில்நுட்ப நிறுவனங்களை வாஷிங்டன் தடுப்பு பட்டியலில் புதிதாக சேர்த்துள்ளது.

12 சீன நிறுவனங்கள் தவிர, இந்தப் பட்டியலில் ஜப்பான், பாகிஸ்தான் மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளின் நிறுவனங்களும், ரஷ்யாவை தளமாகக் கொண்ட ஒரு நிறுவனமும் உள்ளன. (ஐ)

## ரஷ்ய சுரங்கத்தில் தீ; 75 பேர் உள்ளே சிக்கினர்!

மொஸ்கோ, நவ. 26

ரஷ்யாவில் நிலக்கரிச்சுரங்கத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் ஒருவர் உயிரிழந்தார். 75 பேர் சுரங்கத்தில் சிக்கியுள்ளனர். ரஷ்யாவின் சேர்பியா மாகாணத்தில் லிஸ்ட்யாஸ்னியா நிலக்கரி சுரங்கத்தில் நேற்று இந்த விபத்து இடம்பெற்றது.

820 அடி ஆழத்தில், 280இற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் நிலக்கரி வெட்டி எடுக்கும் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

தீ விபத்தால் சுரங்கத்தின் மேற்கூரை இடிந்து விழுந்தது. இதனால், தொழிலாளர்கள் சிக்கினர். மீட்பு குழுவினர் 236 பேரை உயிருடன் மீட்டனர்.

எனினும், விபத்தில் ஒருவர் உயிரிழந்தார். சுரங்கத்துக்குள் 75 பேர் இடிபாடுகளுக்குள் சிக்கியுள்ளனர். அவர்களை மீட்கும் பணி இடம்பெற்று வருகின்றது. (ஐ)

## பதவியேற்ற 12 மணி நேரத்தில் சுவீடன் பிரதமர் இராஜினாமா!

ஸ்டோக்ஹோம், நவ. 26



சுவீடனின் முதல் பெண் பிரதமராக பதவியேற்ற மக்டலெனா அண்டர்சன், பதவியேற்ற சில மணி நேரங்களிலேயே தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

54 வயதான மக்டலெனா, புதிதாக தெரிவான 12 மணி நேரத்திற்கும் குறைவான நேரமே நாட்டின் பிரதமராக இருந்தார். மக்டலெனா, செய்தியாளர் சந்திப் பில், பிரதமர் பதவியில் இருந்து தன்னை விடுவிக்குமாறு சபாநாயகரிடம் கேட்டுக் கொண்டாரெனக் கூறினார்.

அத்துடன், தனிக்கட்சி அரசாங்கத்தின் தலைவராக மீண்டும் பிரதமராக முயற்சிப்பேன் என்றும் அவர் பாராளுமன்ற சபாநாயகரிடம் தெரிவித்ததாக மக்டலெனா சுட்டிக்காட்டினார். சுவீடனின் முதல் பெண் பிரதமந்திரியாக மக்டலேனா ஆண்டர்சன் புதன்கிழமை பதவியேற்றார். மக்டலினா ஆண்டர்சனுக்கு முன்னதாக 33 பேர் சுவீடனின் பிரதமர் பதவியில் இருந்துள்ளார்.

இதேசமயம், ஆளும் கட்சியின் வரவு - செலவு திட்டத்தை விட எதிர்க்கட்சியின் வரவு - செலவு திட்டத்துக்கு பாராளுமன்றில் அதிக வாக்குக் கிடைத்துள்ளது. இதனாலேயே சுவீடன் பிரதமர் பதவியை இராஜினாமா செய்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## விண்கல்லை திசை திருப்புவதற்கு நாஸா செயற்கை கோளை ஏவியது

நியூயோர்க், நவ. 26

பூமிக்கு ஆபத்தை ஏற்படுத்தக் கூடிய விண்கற்களை, அவற்றின் சுற்றுவட்டப்பாதையிலிருந்து திசைத் திருப்புவதற்கான செயற்கைக் கோள் ஒன்றை சோதனை முறையில் அமெரிக்காவின் நாஸா விண்வெளி ஆய்வு மையம் விண்ணில் செலுத்தியுள்ளது.

விண்வெளியில் வலம் வந்து கொண்டிருக்கும் மிகப் பெரிய கற்கள் விழுந்து பூமியை அழிக்கக் கூடும் என்ற அச்சம் பல காலமாக நிலவி வருகிறது. ஏற்கெனவே, இதுபோன்ற கற்களில் ஒன்று பூமியில் விழுந்ததால்தான் டைனோசர் இனம் முற்றிலுமாக அழிந்ததாகக் கூறப்படுகிறது.

தற்போது பூமிக்கு உடனடியாக எந்த விண்கல்லாலும் ஆபத்து இல்லை என்றாலும், எதிர்காலத்தில் அத்தகைய அபாயம் ஏற்படும் நிலையில், அந்தக் கற்களிலிருந்து பூமியைக் காப்பதற்கான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்தப் பின்னணியில் ஏற்கெனவே பல திரைப்படங்கள் வெளியாகியிருந்தாலும், தற்போது அத்தகைய முயற்சியை சோதனை முறையில் நாஸா மேற்கொண்டுள்ளது. அதற்காக, விண்கல் ஒன்றின் மீது வேண்டுமென்றே மோதி அதன் சுற்றுவட்டப் பாதையை மாற்று வதற்காக செயற்கைக்கோள் ஒன்றை விண்ணில் நாஸா விண்ணில் செலுத்தியுள்ளது.



2,500 அடி விட்டம் கொண்ட 'டிடிமாஸ்' என்ற விண்கல்லைச் சுற்றி வரும் 'டிமார்பாஸ்' என்ற குட்டி நிலவு விண்கல்லை குறிவைத்து அந்த செயற்கைக்கோள் செலுத்தப்பட்டுள்ளது. அந்த இரண்டு விண்கற்களும் சூரியனை வலம் வந்துகொண்டிருக்கின்றன.

நாஸா செலுத்தியுள்ள செயற்கைக்கோள், டிமார் பாஸ் விண்கல் மீது அடுத்த ஆண்டு வேகமாக மோதிச் சிதறி, அதன் சுற்றுவட்டப் பாதையை மாற்ற முயலும்.

பூமியிலிருந்து 1.1 கோடி கி.மீ. தொலைவில் அந்த விண்கல் வந்துகொண்டிருக்கும்போது இந்த மோதல் நிகழும். அந்த விண்கற்களால் பூமிக்கு எந்த ஆபத்து இல்லையென்றாலும், எதிர்காலத்தில் வரக்கூடிய அத்தகைய அபாயங்களை எதிர்கொள்வதற்குத் தங்களைத் தயார்படுத்திக் கொள்வதற்காக இந்த ஆய்வை மேற்கொள்வதாக நாஸா விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். (ஐ)

## பாகிஸ்தானுக்குள் பயணிக்க இந்தியாவுக்கு அனுமதி

இஸ்லாமாபாத், நவ. 26

இந்தியாவிலிருந்து ஆப்கானிஸ்தானுக்கு 50 ஆயிரம் தொன் கோதுமை, உயிர்காக்கும் மருந்துகளுடன் அனுப்பி வைக்கப்பட்டுள்ள இந்திய சரக்கு வாகனங்களை பாகிஸ்தான் வழியாக கொண்டு செல்ல மனிதாபிமான அடிப்படையில் அனுமதியளித்துள்ளதாக பாகிஸ்தான் தெரிவித்துள்ளது.

ஆப்கானிஸ்தானுக்கு இந்தியாவிலிருந்து அனுப்பி வைக்கப்படும் கோதுமையை ஏற்றிச் செல்லும் சரக்கு வாகனங்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் அனுமதி அளிக்கப்படும் என பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கான் திங்கள்கிழமை அறிவித்தார்.

இந்நிலையில், பாகிஸ்தான் வெளியுறவுத் துறை அமைச்சக அலுவலகம் புதன்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையில், மனிதாபிமான அடிப்படையில் பாகிஸ்தான் வழியாக கோதுமையை அனுப்ப இந்தியாவுக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது. பாகிஸ்தான் அரசின் இந்த முடிவு குறித்து இந்தியாவுக்கு முறையாகத் தெரிவிக்கப்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது. (ஐ)

# இலங்கை அணி அபார வெற்றி; மே. இ. தீவுகளுடனான டெஸ்டில்!



காலி, நவ. 26

எம்புல்தெனிய 5 விக்கெட்களை வீழ்த்தி உதவ மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியை 187 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

இலங்கை வந்துள்ள மேற்கிந்தியத் தீவுகள் அணி இரு டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது. முதல் டெஸ்ட் போட்டி கடந்த திங்கட்கிழமை ஆரம்பமானது.

நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை முதல் இனிங்ஸுக்காக 133.5 ஓவர்களில் 386 ஓட்டங்களை பெற்றது. பதிலுக்கு தனது முதல் இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத்தீவுகள் 85.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 230 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது.

இதனால் 156 ஓட்ட முன்னிலையுடன் இரண்டாவது இனிங்ஸை ஆரம்பித்த இலங்கை 40.5 ஓவர்களில் 4 விக்கெட்களை இழந்து 191 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை இடைநிறுத்தி, மேற்கிந்தியத் தீவுகளை துடுப்பெடுத்தாட அழைத்தது. இதனால், மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு வெற்றி இலக்காக 348 ஓட்டங்கள் நிர்ணயிக்கப்பட்டன.

நான்காம் நாள் ஆட்டம் முடிவின்போது, 52 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்களை இழந்து தடுமாறியது. இந்த நிலையில் போட்டியின் இறுதி நாளான நேற்று ஆட்டத்தை ஆரம்பித்தது மேற்கிந்தியத் தீவுகள் அணி. 4 விக்கெட்கள் இருந்த நிலையில் 296 ஓட்டங் களைப் பெற வேண்டும் என்ற இக்கட்டான நிலை காணப்பட்டது.

ஆடுகளத்தில் பொன்னர் 18 ஓட்டங்களுடனும், ஜோசுவா டா சில்வா 15 ஓட்டங்களுடனும் ஐந்தாம் நாள் ஆட்டத்துக்காக தொடர்ந்தும் துடுப்பெடுத்தாடினர்.

மதிய நேர உணவு இடைவேளையின்போது மேற்கிந்தியத்தீவுகள் மேலதிகமாக ஒரு விக்கெட்டைப் பறிகொடுத்து 125 ஓட்டங்களை பெற்றிருந்தது.

மதிய நேர உணவு இடைவேளையின் பின்னர் மேற்கிந்தியத்தீவுகள் அணி 79 ஓவர்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 160 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது. இதனால், 187 ஓட்டங்களினால் தோல்வியைத் தழுவியது.

மேற்கிந்தியத்தீவுகள் சார்பில் அதிகபடியாக ஜோசுவா டா சில்வா 54 ஓட்டங்களை பெற்று ஆட்டமிழக்க, பொன்னர் ஆட்டமிழக்காது 68 ஓட்டங்களைப் பெற்றார்.

இரண்டாவது இனிங்ஸில் இலங்கை அணியின் பந்து சார்பில் எம்புல்தெனிய 5 விக்கெட்களையும், ரமேஷ் மெண்டிஸ் 4 விக்கெட்களையும், பிரவீன் ஜெயவிக்ரம ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

போட்டியின் நாயகனாக திமுத் கருணாரத்ன தெரிவானார். இந்த வெற்றியின் மூலம் இலங்கை 1:0 என்ற கணக்கில் தொடரில் முன்னிலையில் உள்ளது. (ஐ)



# சம்பியன்ஸ் லீக் உதைபந்து: லிவர்பூல் அபார வெற்றி!

லிவர்பூல், நவ. 26

சம்பியன்ஸ் லீக் உதைபந்தாட்ட தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற போட்டியில் லிவர்பூல் - போர்ட்டோ அணிகள் மோதின.

முதல் பாதியில் பல வாய்ப்புகள் கிடைத்தும் அவை அனைத்தையும் போர்ட்டோ அணி வீரர்கள் கோல்களாக மாற்றத் தவறினர்.

மறுமுனையில், லிவர்பூல் அணியின் தியாகோ அல்காண்ட்ரா சம்பியன்ஸ் லீக் உதைபந்தாட்டத் தொடரில் தனது முதல் கோல் அடித்து அசத்தினார். மற்றொரு வீரர், முகமது சலா இன்னொரு கோல் அடிக்க லிவர்பூல் அணி 2-0 எனும் கோல் கணக்கில் அபார வெற்றி பெற்றது.

கடைசி வரை போராடிய போர்ட்டோ அணியால் கோல் அடிக்க முடியவில்லை.

போர்ட்டோ அணி லிவர்பூல் அணிக்கு எதிராக 10 போட்டிகளில் விளையாடி 7 போட்டிகளில் தோல்வியும் 3 போட்டிகளை சமநிலை செய்தும் உள்ளது. இதுவரை அந்த அணியால் லிவர்பூல் அணியை வெற்றி பெற முடியாத சோகக் கதை இன்னும் தொடர்ந்து கொண்டிருக்கிறது. (ஐ)



*சம்பியன்ஸ் லீக் உதைபந்து:*

# பாரிஸ் சென். ஜெர்மைனை வீழ்த்தியது மன்செஸ்டர் சிற்றி

மன்செஸ்டர், நவ. 26

சம்பியன்ஸ் லீக் உதைபந்தாட்டப் போட்டியில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் மன்செஸ்டர் சிற்றி அணி வெற்றி பெற்றது.

பாரிஸ் சென். ஜெர்மைன் அணிக்கு எதிராக இடம்பெற்ற இந்தப்போட்டி மிகவும் விறுவிறுப்பாக இடம்பெற்றது.

முதல் பாதி ஆட்டத்தில், இரு அணிகளும் கோல் அடிக்கவில்லை, ஆட்டத்தின் இரண்டாவது பாதியில் 50ஆவது நிமிடத்தில் பாரிஸ் அணியின் கிலியன் எம்பாப்பே ஒரு கோல் அடித்தார். இதனால், பாரிஸ் அணி 1-0 என்று முன்னிலை பெற்றது.

இதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் மன்செஸ்டர் சிற்றி அணியின் ரஹீம் ஸ்டெர்லிங் 63ஆவது நிமிடத்திலும் ,கேப்ரியல் ஜீசஸ் 76ஆவது நிமிடத்திலும் கோல் அடித்தனர். இதனால் மன்செஸ்டர் சிற்றி அணி 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ஐ)

# நியூசிலாந்துடனான டெஸ்ட்; முதல் நாளில் இந்தியா 258/4

கான்பூர், நவ. 26

நியூசிலாந்து அணிக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் முதல்நாளில் இந்திய அணி 4 விக்கெட் இழப்புக்கு 258 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

இந்தியா சென்றுள்ள நியூசிலாந்து அணி, 3 போட்டிகள் இருபது - 20 தொடரை இந்தியாவிடம் முழுமையாக இழந்தது. இந்த நிலையில் இரு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் நேற்று ஆரம்பமானது.

கான்பூரில் ஆரம்பமான முதல் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற அணித் தலைவர் ரஹானே முதலில் துடுப்பாட்டத்தைத் தெரிவு செய்தார்.

மயங்க் அகர்வால் - சுப்மன் கில் இணை தொடக்கம் கொடுத்தது. 13 ஓட்டங்களுடன் மயங் அகர்வால் வீழ்த்தப்பட்டார். அடுத்து வந்த செதேஷ்வர் புஜாரா கில்லுடன் இணைந்து போராடினார். 30ஆவது ஓவரில் சுப்மன் கில் அரைச்சதம் கடந்த நிலையில் ஆட்டமிழந்தார். அவர் 5 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸருடன் 52 ஓட்டங்களை எடுத்திருந்தார்.

அடுத்து புஜாராவுடன் இணைந்த ரஹானே நிதான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். எனினும், இந்த இணையால் அதிகம் தாக்குப்பிடிக்க



முடியவில்லை. புஜாரா 26, ரஹானே 35 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர்.

எனினும், ஐந்தாவது விக்கெட்டுக்காக இணைந்த அறிமுக வீரர் ஸ்ரேயாஸ் ஐயர், ரவீந்திர ஜடேஜா இணை அசத்தலான ஆட்டத்தை வெளிப்படுத்தியது.

இருவரும் நியூசிலாந்து பந்துவீச்சாளர்களை சிறப்பாகக் கையாண்டு அரைச்சதம் கடந்தனர்.

84 ஓவர்கள் வீசப்பட்ட நிலையில் முதல்நாள் ஆட்டம் முடிவுக்கு வந்தது. இந்திய அணி 4 விக்கெட்கள் இழப்புக்கு 258 ஓட்டங்களை எடுத்துள்ளது. ஸ்ரேயாஷ் ஐயர் 75 ஓட்டங்களுடனும், ரவீந்திர ஜடேஜா 50 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் உள்ளனர்.

நியூசிலாந்தின் பந்துவீச்சில் கைல் ஜமிசன் 3 விக்கெட்களையும், ரிம் சௌதி ஒரு விக்கெட்டையும் கைப்பற்றியுள்ளார்.

இன்று போட்டியின் இரண்டாம் நாள் ஆட்டமாகும். (ஐ)

# இறந்தவர்களுக்காக இழப்பீடு கொடுத்து நடந்த இழப்பை ஈடுசெய்யவே முடியாது!

## கிண்ணியா அனர்த்தம் தொடர்பில் அரசு கவலை

கொழும்பு, நவ. 26



**"கிண்ணியா - குறிஞ்சாக்கேணியில் பாலம் அமைப்பதற்கான பூர்வாங்க பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதோடு இங்கு துரிதமாக பாலம் அமைத்துக் கொடுப்பதே அனர்த்தத்தால் உயிரிழந்தவர்களுக்கு செய்யும் மிகப் பெரிய நியாயம். இறந்தவர்களுக்காக இழப்பீடு கொடுத்து நடந்த இழப்பை ஈடுசெய்ய முடியாது. எனினும், இறந்தவர்களின் குடும்பங்களுக்கு இழப்பீடு வழங்கப்படும்."**

- இவ்வாறு அமைச்சரவை ஊடகப் பேச்சாளர் அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: -

"கிண்ணியாவில் பாலம் அமைக்க இரு தடவை அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

இராஜாங்க அமைச்சர் நிமல் லான்சா அங்கு சென்று அடிக்கல் நாட்டி பூர்வாங்க செயற்பாடுகள் இடம்பெறும் நிலையிலே இந்த அனர்த்தம் நடந்துள்ளது.

தற்காலிகமான 3.5 கிலோ மீற்றர் நீள பாதையொன்றும் இங்கு நிர்மாணிக்கப்பட்டிருந்தது.

கிண்ணியா நகர சபையும் பிரதேச சபையும் இங்கு படகுப் பாலம் அமைக்க அனுமதி கோரியிருந்தன. ஆனால், அதற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கவில்லை. அது நிராகரிக்கப்பட்டு தற்காலிக வீதி நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

அனுமதி இன்றியே இந்தப் படகுப் பாலம் செயற்படுத்தப்பட்டுள்ளது. சட்டத்துக்குப் பொறுப்பான அதிகாரிகள் அது தொடர்பில் செயற்படுவர்.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாயும் இரு குழந்தைகளும் இறந்துள்ளன. இது நட்டஈடு வழங்கி ஈடுசெய்ய முடியாத இழப்பாகும். வாழும் அவர்களின் குடும்பங்களுக்காக நட்டஈடு வழங்க அரசு நடவடிக்கை எடுக்கும். இதற்கு முன்னர் கிண்ணியாவுக்குச் செல்ல பாலம் இருக்கவில்லை. படகுப் பாலம்தான் இருந்தது.

நான் போக்குவரத்து அமைச்சராகப் பணியாற்றிய போது அங்கு ஆபத்தான படகுப் பாலத்தில் சென்றிருக்கின்றேன். மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்தபோது இங்கு பாலம் அமைக்க நடவடிக்கை எடுத்தார்.

விபத்து நடந்த இடத்தில் பாலம் அமைக்கும் பணி தாமதமாகியுள்ளது. தற்போது அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இங்கு துரிதமாகப் பாலம் அமைத்துக் கொடுப்பதே இந்த அனர்த்தத்துக்கு முகங்கொடுத்தவர்களின் குடும்பத்தினருக்கு செய்யும் உச்சபட்ச நியாயமாக இருக்கும். அது எமது அரசின் முழுமையான பொறுப்பாக கருதுகின்றோம்.

இவ்வாறு ஆபத்தான ஆயிரம் பாலங்கள் நாட்டில் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவற்றை நிர்மாணிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இவற்றின் மூலம் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு கிடைக்கும் என்று கருதவில்லை. ஆனால், முன்னுரிமை வழங்க வேண்டிய பாலங்களே இவ்வாறு அடையாளம் காணப்பட்டு நிர்மாணிக்கப் படுகின்றன" - என்றார்.

(இ)



# 50அடி பள்ளத்தில் வீழ்ந்தது ஓட்டோ ஒருவர் உயிரிழப்பு; மூவர் படுகாயம்

ஹற்றன், நவ. 26

ஹற்றன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் ஓட்டோ ஒன்று வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்தார். அத்துடன் மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

ஹற்றன், டிக்கோயா பகுதியிலிருந்து பெரிய மணிக்வத்தைப் பகுதிக்கு சென்றுகொண்டிருந்த குறித்த ஓட்டோ, நேற்றுமுன்தினம் இரவு 7 மணியளவில் பெரிய மணிக்வத்தைத் தோட்டத்துக்குச் செல்லும் வீதியில் வீதியை விட்டு விலகி சுமார் 50 அடி பள்ளத்தில் பாய்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

பெரிய மணிக்வத்தை பகுதியைச் சேர்ந்த சுந்தராஜ் (வயது - 65) மூன்று பிள்ளைகளின் தந்தையே விபத்தில் மரணமடைந்தார்.

உயிரிழந்தவரின் சடலம் டிக்கோயா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

படுகாயமடைந்த மூவரும் டிக்கோயா ஆதார வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

(இ)

# 'எலிக்காய்ச்சல்' தீவிரமடையும் ஆபத்து; இவ்வருடம் இதுவரை 5,275 பேர் பாதிப்பு

கொழும்பு, நவ. 26

நாட்டில் 2021ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் இம் மாதம் 17 ஆம் திகதி வரை 5 ஆயிரத்து 275 பேர் எலிக் காய்ச்சலுக்கு உள்ளான நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் என்று தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

ஒக்ரோபர் மாதத்தில் மாத்திரம் 844 எலிக்காய்ச்சலுக்கு உள்ளான நோயாளிகள் பதிவாகியுள்ளனர் என்று இப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்தக் காலப்பகுதியில் இரத்தினபுரி மாவட்டத்திலேயே அதிக எண்ணிக்கையிலான நோயாளிகள் பதிவாகியுள்ளனர்.

இவர்களின் எண்ணிக்கை 706 ஆகும். மேலும், காலி மாவட்டத்தில் 643 பேரும், களுத்துறை மாவட்டத்தில் 600 பேரும், கேகாலை மாவட்டத்தில் 418 பேரும் எலிக்காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, திருகோணமலை மாவட்டத்தில் மிகக் குறைந்த எண்ணிக்கையான எலிக்காய்ச்சல் நோயாளிகள் பதிவாகியுள்ளனர். இவர்களின் எண்ணிக்கை 4 ஆகும்.

2020ஆம் ஆண்டில் 8 ஆயிரத்து 579 எலிக்காய்ச்சல் நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் எனவும், கடந்த வருடத்துடன் ஒப்பிடும்போது இவ்வருடம் எலிக்காய்ச்சலால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை சிறிதளவு குறைவடைந்துள்ளமையைக் காணக் கூடியதாக உள்ளது எனவும் தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

(இ)

# ஏழு மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்ட மண்சரிவு அபாய எச்சரிக்கை நீடிப்பு

கொழும்பு, நவ. 27

நாட்டின் 7 மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்டிருந்த மண்சரிவு அபாய எச்சரிக்கை தொடர்ந்தும் நீடிக்கப்பட்டுள்ளது

தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நுவரெலியா, கொழும்பு, கண்டி, களுத்துறை, மாத்தளை, குருநாகல் மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களுக்கே இவ்வாறு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அவற்றில் கண்டி, மாத்தளை, குருநாகல் மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களின் பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு இரண்டாம் நிலை மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மண்சரிவு ஏற்படும் அபாய பகுதிகளில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறு தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளது. (இ)

DAN CINE MARATHON
மாபெரும் குறும்படப் போட்டி
இது நமது திரைத்துறை கலைஞர்களுக்கான சந்தர்ப்பம்
உங்கள் அணியினருடன் போட்டியில் கலந்துகொள்ளத் தயாராகுங்கள்
Dan Cine Marathon குறும்படப் போட்டியில் பங்குபற்றவிரும்பும் அணிகள் இப்போதே உங்கள் விவரங்களைப் பதிவு செய்து கொள்ளுங்கள்
தொடர்புகளுக்கு :
075 313 2901, 075 313 2932, 076 921 3686



# யானை தாக்கி ஒருவர் மரணம்

முல்லைத்தீவு, நவ. 26

முல்லைத்தீவு மாவட்டம், புதுக்குடியிருப்பு - மன்னா கண்டல் பகுதியில் காட்டு யானை தாக்கியதில் ஒருவர் உயிரிழந்தார்.

நேற்றுமுன்தினம் இரவு 9 மணியளவில் வீட்டிலிருந்து மீன்பிடிப்பதற்காகப் புறப்பட்ட குறித்த நபர், மீள வீடு திரும்பவில்லை.

இந்நிலையில், அவரைத் தேடி நேற்று அதிகாலை 2 மணியளவில் உறவினர்கள் சென்றபோது, காட்டுப்பகுதியில் யானை தாக்கி அவர் இறந்து கிடந்துள்ளார்.

சம்பவத்தில் உயிரிழந்தவர் கெருடமடு மன்னகண்டலச் சேர்ந்த 65 வயதுடைய அழகன் கோபால்ராஜ் என்பவராவர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் புதுக்குடியிருப்புப் பொலிஸாரால் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(இ)

# துப்பாக்கிகளுடன் மூன்று பேர் கைது

கொழும்பு, நவ. 26

உள்நாட்டுத் துப்பாக்கிகளுடன் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

கேகாலை, நூரிய பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பல்லேபோக பிரதேசத்தில் பொலிஸார் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின்போது உள்நாட்டு துப்பாக்கியுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கித்துல்கல பிரதேசத்தைச் சேர்ந்த 51 வயது நபரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, இரத்தினபுரி, வெலிகோபொல பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பரகஹமடித்த பிரதேசத்தில், வெலிகோபொல பொலிஸார் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின்போது உள்நாட்டு துப்பாக்கிகள் இரண்டுடன் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அக்குரெல்ல பிரதேசத்தை சேர்ந்த 25, 28 வயதுகளையுடைய இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். (இ)

# பொலிஸ் விசேட அதிரடிப் படையின் சுற்றிவளைப்புகளில் ஏழு பேர் கைது

கொழும்பு, நவ. 26

பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் மேற்கொண்ட விசேட சோதனை நடவடிக்கையின்போது பல்வேறு குற்றங்களுடன் தொடர்புடைய 7 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதற்கமைவாக ஐந்து மதுபான சுற்றிவளைப்பு களில் நால்வர் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன் 34.5 லீற்றர் மதுபானமும் கைப்பற்றப்பட்டுள்ளது.

அத்துடன் 542 லீற்றர் கோடா, ஒரு மோட்டார் சைக்கிள், இரண்டு செப்புத் தகடுகள், இரண்டு இரும்பு பீப்பாய்கள் என்பவற்றையும் விசேட அதிரடிப் படையினர் கைப்பற்றியுள்ளனர்.

கொழும்பு, கொள்ளுப்பிட்டி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில், தீர்வை வரியின்றி இந்த நாட்டுக்குக் கொண்டுவரப்பட்ட ஆயிரம் புகைத்தல் பொருட்களுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். கொழும்பு - 03 ஐச் சேர்ந்த 27 வயது நபரே கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு, வாழைத்தோட்டம் பொலிஸ் பிரிவில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில், தீர்வை வரியின்றி இந்நாட்டுக்குக் கொண்டுவரப்பட்ட ஆயிரம் புகைத்தல் பொருட்களுடன் 30 வயது நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார். கொழும்பு, மாளிகாவத்தையைச் சேர்ந்த நபரே கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு, மாளிகாவத்தை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாளிகாவத்தை பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் 34 கிராம் ஐஸ் போதைப்பொருளுடன் ஒருவர் கைதுசெய் யப்பட்டுள்ளார். மாளிகாவத்தைப் பிரதேசத்தைச் சேர்ந்த 40 வயது நபரே கைது செய்யப்பட்டுள்ளார். (இ)



# வவுனியாவில் அடை மழை

வவுனியா, நவ. 26

வவுனியாவில் பெய்து வரும் கடும் மழை காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்படைந்துள்ளது.

இலங்கையின் தென்கிழக்குப் பகுதியில் வங்காள விரிகுடாவில் தாழமுக்கம் உருவாகியுள்ளது. இதன் காரணமாக வடக்கு உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் மழை பெய்யும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் நேற்றுமுன்தினம் மாலையில் இருந்து வவுனியாவில் மழை பெய்து வருவதுடன் நேற்று அதிகாலை முதல் கடும் மழை தொடர்ச்சியாகப் பெய்து வருகின்றது.

இதன்காரணமாக தாழ் நிலப் பகுதிகள் வெள்ளக் காடாக காட்சியளிப்பதுடன், வீதிகளில் மக்கள் நடமாட்டமும் குறைவடைந்து இயல்பு நிலை பாதிக்கப்பட்டுள்ளது. அத்துடன், பாடசாலைகளுக்கு மாணவர் வரவும் மிகவும் குறைவாகக் காணப்பட்டது. (இ)

# தமிழ் - முஸ்லிம் ஒற்றுமையில்லையேல் கிழக்கைப் பறித்துவிடுவர் சிங்களவர்!

## சாணக்கியன் எம். பி. எச்சரிக்கை



கனடா, நவம்பர் 26

**கிழக்கு மாகாணத்தில் தமிழர்களும் இஸ்லாமியர்களும் ஒற்றுமையாகச் செயல்படாவிடின், எதிர்காலத்தில் சிங்கள மக்களின் ஆதிக்கம் மாகாணத்தில் அதிகரித்துவிடும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்தார்.**

கனடா வாழ் இலங்கை முஸ்லிம் சமூகத்தினரை நேற்றுமுன்தினம் சந்தித்துப் பேசியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"உண்மையிலேயே என்னைப் பொறுத்தவரையில் நான் ஒரு பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையில், அனைத்து சமூகங்களுக்காகவும் குரல் கொடுக்கும் ஒருவராகவே என்னைப் பார்க்கின்றேன்.

சில இஸ்லாமிய அரசியல்வாதிகள் மத்தியில் கருத்து ஒன்று உள்ளது. இவர் என்ன எங்களுடைய பிரச்னைகளைக் கதைக்கின்றார், எங்களுக்காகப் பேசுகின்றார் என்று அவர்கள் நினைக்கின்றனர். எனினும், நான் அனைத்துப் பிரச்னைகளுக்காகவும் குரல் கொடுகின்றேன்.

அதிலே இஸ்லாமிய சகோதரர்கள் மத்தியிலேயே அதிக வரவேற்பு கிடைத்துள்ளது. தமிழ் மக்களுக்காகக் குரல் கொடுக்கும்போது எங்களைப் பாராட்டுவதை விடவும், இஸ்லாமியர்களுடைய பாராட்டுக்கள் அதிகமாக வருகின்றன.

எனக்கு முன்னர் உரையாற்றிய ஒருவர் சொன்னார், நாங்கள் அவர்களுக்கு வாக்களிக்கப்போவதில்லை என்று. அது உண்மைதான். என்னைப் பொறுத்தவரையில் நான் அந்த வாக்குகளை எதிர்பார்த்து எதனையும் செய்யவில்லை" - என்றார். (இ)



# ஹக்கீமுடன் ஐ.நா. குழு நேற்று முக்கிய பேச்சு

கொழும்பு, நவ. 26

ஐ.நா. சபையிலிருந்து வருகை தந்துள்ள அதன் மத்திய கிழக்கு, ஆசிய மற்றும் பசுபிக் பிராந்தியங்களுக்குரிய அரசியல் மற்றும் சமாதான விவகாரங்களுக்கான பிரதிச் செயலாளர் நாயகம் காலித் ஹையரி, மற்றும் இலங்கைக்கான ஐ.நா. வதிவிட இணைப்பாளர் ஹனா சிங்கர் உள்ளிட்ட உயர் மட்ட தூதுக்குழுவினர், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமை நேரில் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளனர்.

இந்தச் சந்திப்பு கொழும்பு - ஷங்கரிலா ஹோட்டலில் நேற்று நடைபெற்றது.

இதன்போது சிறுபான்மைச் சமூகத்தினர் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் சமகால அரசியல் சூழ்நிலை என்பன குறித்துக் கலந்துரையாடப்பட்டன. (இ)

# யாழில் 3 வாரங்களில் 21 பேருக்கு டெங்கு!

யாழ்ப்பாணம், நவ. 26

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் மூன்று வாரங்களில் மட்டும் சுமார் 21 பேர் டெங்கு நோய் தொற்றால் பாதிக்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளனர் என்று மருத்துவர் சி.யமுனானந்தா தெரிவித்துள்ளார். யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய், சண்டிலிப்பாய், வேலணை, தெல்லிப்பழை, பளை போன்ற பிரதேசங்களைச் சேர்ந்தவர்களே இவ்வாறு சிகிச்சை பெற்றுள்ளனர்.(இ)

# பெண்ணொருவரை கத்தியால் குத்திய முன்னாள் சிப்பாய் கைது

கொழும்பு, நவ. 26

கொழும்பு, அங்கொடை சந்திக்கு அருகில் பெண்ணொருவர் கத்தியால் குத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் முன்னாள் இராணுவச் சிப்பாய் ஒருவரை முல்லேரியா பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தில், முல்லேரியா பிரதேசத்தை சேர்ந்த 32 வயது பெண்ணே படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அங்கொடை சந்திக்கு அருகில், பொதுமக்கள் பார்த்துக்கொண்டிருக்கும்போதே சந்தேகநபர் குறித்த பெண்ணைக் கூரிய கத்தியால் குத்தியுள்ளார்.

இதையடுத்து குறித்த நபர் தப்பிச் செல்ல முயன்ற நிலையில், பொதுமக்களின் உதவியுடன் பொலிஸார் சந்தேகநபரைக் கைதுசெய்துள்ளனர்.

சம்பவத்தில் படுகாயமடைந்த பெண் வைத்தியசாலையில் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றார்.

இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)










இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 26.11.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திபாடல்
6.30 மணி : வணக்கம் டான்



6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய ராசி பலன்கள்
07.05 மணி : உளவியல் கருத்து-உளவள துனையாளர் திரு.நா.நவராஜ்
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகள்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை- நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : மாதம் ஒரு இசைக்குழு- மறுஒளிபரப்பு

**பகல்**
12:00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
01.00மணி : துறைக்கு அப்பால் (மறுஒளிபரப்பு)
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-கழுகு,சலீம் திரைப்படங்களிலிருந்து காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர்களுக்கான நேரலை நிகழ்ச்சி
5.30 மணி : Short Film
6.00 மணி : ஹோலிவூட் சுப்பர்-10



**இரவு**
7.00 மணி : ரசிகன் என்கின்ற தலைவன்- நகைச்சுவை நிகழ்ச்சி



08.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : அந்தக்காலம் இந்தக்காலம் -பொருளாதாரம்



10.00 மணி : நேருக்கு நேர்

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : திரைப்படம்

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் வடிவேல் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : திரைப்படம்
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : திரைப்படம்
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஒய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**காலை**
5.15 மணி : க.பொ.த உயர்தரம் - விவசாயம்
6.00 மணி : க.பொ.த உயர்தரம் - வணிகம்
6.45 மணி : க.பொ.த உயர்தரம் - உயிரியல்
7.30 மணி : க.பொ.த உயர்தரம் - பொருளியல்
8.15 மணி : க.பொ.த உயர்தரம் - கணக்கீடு
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப் பிரிவு) விஞ்ஞானம்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) பொருளியல்
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) இரசாயனவியல்

**பகல்**
12.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) மறு ஒளிபரப்பு
1.00 மணி : தரம் 5 மாதிரி வினாத்தாள்
2.00 மணி : தரம் 5 சுற்றாடல்
3.00 மணி : தரம் 5 கணிதம்
4.00 மணி : தரம் 6 - 9 ஆங்கிலம்
5.00 மணி : பொது சிங்களம்
6.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த. சாதாரண தர மாதிரி வினாத்தாள்

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி :செய்திகள்
7.30 மணி : அருளுரை

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : இயேசுவின் போதனைகள் (மறுஒளிபரப்பு)
8.00 மணி : ஜெபமாலை
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: ஜெபங்களும் திருகோணமலை நிகழ்ச்சி
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : அன்பியம் சனி மறுஒளிபரப்பு

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (யாழ்ப்பாணம்)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (யாழ்ப்பாணம்)

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய சிறுவர் பாடல்
8.00 மணி : சற் வித் குட்டீஸ்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : வேர் கொள்
11.00 மணி : மனிதம்
11.30 மணி : சுக வாழ்வு

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : அன்னிஸா
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
4..00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : சற் வித் குட்டீஸ்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : பாடல்
8.30 மணி : மனிதம் வித் றிஸ்வான்
9.00 மணி : Bayan
10.00 மணி : சீரிஸ்
10.30 மணி : கலந்துரையாடல்